ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

28.07.2010 - மலர் 07, இதழ் 21



## சாதனை வீரனின் மற்றுமொரு மைல்கல்

## 800

## வழிதவறி வந்த சாம்பல் திமிங்கிலம்

## தகவல் தொடர்பாடல் உருவான வரலாறு

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆள்பதிகளின் இடமாற்றம்

ஒல்லாந்த ஆள்பதியாகிய பீல் என்பவர் தம் பதவியை விட்டு விலகிச் செல்லத் தீர்மானித்தார். இது குறித்து இரண்டாம் விமலதர்ம சூரியனுக்கு அறிவித்தார். அவ்வாறு விலகாமல் மேலும் சில காலம் இங்கு தங்குமாறு மன்னன் கேட்டுக்கொண்டான். தன் மீது மன்னனுக்கு பெரிதும் அக்கறை இருப்பதாக அந்த ஒல்லாந்த ஆள்பதி நினைத்தார். இதனால் தனது விலகும் தீர்மானத்தை ஒத்திவைத்தார். ஆள்பதி பீல் அவர்களின் நல்ல குணங்களை பலவீனம் என கண்டியிலுள்ள சில அதிகாரிகள் நினைத்தனர். இதனால், அவர்கள் தமது அளவற்ற கோரிக்கைகளை முன் வைத்து பல்வேறு தேவைகளை நிறைவேற்றும்படி கேட்டனர்.

இதனுடன், கி.பி 1692 இல் பீல் அவர்கள் பதவியிலிருந்து விலகிச் சென்றார். அவருக்குப் பதிலாக தோமஸ் வேன்ரி என்பவர் ஆள்பதியாக நியமிக்கப்பட்டார். அவரும் மன்னனின் வெறுப்பைச் சம்பாதிக்காமல் நாட்டை ஆளும் கொள்கையைக் கடைப்பிடிக்க முயற்சித்தார். அதனால், அவருக்கு தேவைக்கதிகமான கறுவாவைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. சில சமயங்களில் குறிப்பிட்ட அளவை விட மேலதிகமாகவே கறுவா கிடைத்தது. அவற்றை விற்பனைக்கு அனுப்பினால் விலை குறைந்துவிடலாம் என்ற அச்சத்தினால் அந்த மேலதிக கறுவாவை எரித்து அழித்துவிட்டனர். இந்த ஆள்பதியின் ஆட்சிக்காலத்தில் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முத்துக்குளித்தல் தொழில் மீண்டும் ஆரம்பமாகியது. அதன் மூலமும் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு பெரும் வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. இதனால், இரு தரப்பினரிடையே ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் அவசியம் இல்லாமல் போயிற்று. அதனால், நட்டம் ஏற்படும் என ஆள்பதி எண்ணியமையே அதற்குரிய காரணமாகும். மன்னனுடன் சமாதானமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஒல்லாந்த வர்த்தக சங்கமும் விரும்பியது.

அத்தோடு, மன்னனின் கோரிக்கைகளிலும் வர்த்தக சங்கம் கவனத்தைச் செலுத்தியது. அது கல்பிட்டி, கொட்டியாரம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய துறை முகங்களை பயன்படுத்திக் கொள்ள மன்னனுக்கு இடமளிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வருடத்திலிருந்து

# மேலும் 9 அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும்



எதிர்வரும் வருடத்திலிருந்து மேலும் 9 அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலத்தில் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி; அவிசாவளை சீதாவக ம.ம. வித்தியாலயம், பாதுக்க பியரதன ம.ம. வித்தியாலயம், ஹங்வெள்ள ராஜசிங்க ம.ம.வித்தியாலயம், ஹோமாகம ம.ம. வித்தியாலயம், கொழும்பு லும்பினி வித்தியாலயம், களுத்துறை திஸ்ஸ ம.ம. வித்தியாலயம், கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயம் மற்றும் கம்பஹா ரத்னாவலீ வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேற்படி ஆங்கில மொழிமூலத்தில் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த பாடசாலைகளுக்குத் தேவையான சகல வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் இதனால், ஆங்கில மொழிமூலத்தில் கல்வி கற்பதற்காக கொழும்பு பாடசாலைகளுக்கு வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதளவில் 601 அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 6 இலிருந்து தரம் 11வரை ஆங்கில மொழிமூலத்தில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 43 பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலத்தில் உயர் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கணிதத்தில் சித்திபெறும்வரை மாணவர்கள் உ/தர அனுமதியை இழந்திருப்பது அநீதியாகும்

## ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

க.பொ.த சா/தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் அப்பாடத்தில் சித்திபெறும் வரையில் உ/தரத்தில் கற்பதற்கான அனுமதி வழங்கப்படாமையினால்,அந்த மாணவர்களுக்கு கடும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஆசிரிய சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.



க.பொ.த சா/தரப் பரீட்சையில் சித்தியடைந்து, கணித பாடத்தில் சித்தி பெறத் தவறிய மாணவர்களுக்கு அடுத்த வருட பரீட்சையில் குறித்த பாடத்தில் சித்தியடையும் வரையில் உயர் தரத்தில் கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றபோதும், சில பிரதான பாடசாலைகளின் அதிபர்கள் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பினை வழங்குவதைப் புறக்கணித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபமொன்றின்படி, எந்தவொரு மாணவரும் சா/தரப் பரீட்சையில் சித்தியடைந்து, கணிதத்தில் சித்தியடையவில்லை எனின், மாணவனுக்கு/ மாணவிக்கு உயர்தர வகுப்புக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். பின்னர், மற்றைய பரீட்சையில் அந்த மாணவர்கள் கணிதத்தில் சித்தியடைய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கல்வி அமைச்சின் இந்த ஆலோசனையையும் மீறி, சில பாடசாலை அதிபர்கள் செயற்படுவதனால், குறித்த மாணவர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Vijey විජය விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# ருபெல்லா தடுப்பு மருந்து இனிமேல் பாடசாலைகளில் வழங்கப்படமாட்டாது



ருபெல்லா நோயினை முன்கூட்டியே தடுக்கும் விதத்தில் வழங்கப்படுகின்ற ருபெல்லா தடுப்பு மருந்தினை எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் நடைபெறுகின்ற மருத்துவ முகாம்களின்போது வழங்காதிருப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் இரண்டு மாதங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

16 வயதிற்கும் 44 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களுக்கு அந்தந்த ஊர்களிலுள்ள மருத்துவ மத்தியநிலையங்களில் மாத்திரமே ருபெல்லா தடுப்பு மருந்தினை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் நடைபெற்ற மருத்துவ முகாம்களின்போது ருபெல்லா தடுப்பு மருந்து ஏற்றியதன் பின்னர், சில மாணவிகள் ஒவ்வாமை நிலைமைகளுக்கு ஆளானதோடு, இரண்டு மாணவிகள் மரணித்த சம்பவங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை
வெல்லுங்கள்!

இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

### விதிமுறைகள்

* ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
* முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
* நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 3





# உலகிலேயே அரிய விலங்கினம்: தேவாங்கு

## இலங்கையில் கண்டுபிடிப்பு!



உலகில் மிகவும் அரிய விலங்கினமாகவும் வேகமாக அருகி வரும் விலங்கினமாகவும் அடையாளப் படுத்தப்பட்டுள்ள தேவாங்கு ஒன்று நுவரெலியாவிலுள்ள ஹோர்டன் சமவெளியில் காணக்கிடைத்துள்ளது. இதனைப் புகைப்படம் பிடிப்பதற்கு இலங்கை ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்றுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

1940 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் தேவாங்கு ஒன்றைப் புகைப்படம் பிடிப்பதற்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்று அந்த ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது.

வானரக் குடும்பத்தைச் சேர்ந்த தேவாங்கு, கடல் மட்டத்திலிருந்து 1800 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் அமைந்துள்ள மலைப்பகுதி வனாந்தரங்களில் வாழும் பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்கினமாகும்.



ஹோர்டன் சமவெளியில் காணக்கிடைத்துள்ள இந்த தேவாங்கின் நீளம் சுமார் 8 அங்குலம் அளவில் இருப்பதோடு, அது 'Horton Plains Slender Loris' எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.


30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேளை வாய்ப்பபை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20ரூ பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.


UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிதவறி பல்லாயிரம் மைல்கள் கடந்துவந்த சாம்பல் திமிங்கிலம்

ஒரு காலத்தில் சாம்பல் திமிங்கிலங்கள் வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் பெரும் கூட்டமாக வாழ்ந்து வந்தன. எனினும், 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் அவை அருகி அழிந்து போயின. அதன்பின், அத்திலாந்திக் சமுத்திரத்தில் சாம்பல் திமிங்கிலத்தைக் காண முடியவில்லை. இப்பொழுது எஞ்சியிருக்கும் சாம்பல் திமிங்கிலங்களும் கூட்டமாக தமது வாழ்விடத்தை வட பசுபிக் சமுத்திரத்தின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் அமைத்துக்கொண்டுள்ளன





இஸ்ரவேலுக்கு அருகில் கடலில் திமிங்கிலத்தைக் கண்ட காட்சி



இஸ்ரவேல் நாட்டிற்கு அருகேயுள்ள கடற்பரப்பிற்கு அண்மையில் ஒரு விருந்தினர் வந்திருந்தார். மீனவர்கள்தான் இந்த அந்நிய விருந்தினரை முதன்முதலில் கண்டனர். அம்மீனவர்கள் அதுகுறித்து கடல்வாழ் உயிரினங்கள் சம்பந்தமான இஸ்ரவேல் ஆய்வு நிறுவனத்திற்கு தகவல் அனுப்பினர். அந்நிறுவனத்தின் தலைவரான கலாநிதி அவியத் ஸ்கீனின் தலைமையிலான ஆய்வுக் குழுவொன்று அக்கடல் பரப்பை நோக்கி விரைந்தது. இந்த புதிய விருந்தினர் யார் என்பதை சரியாக இனங்காணவே அவர்கள் அங்கு விரைந்தனர். ஆனால், அந்தப் புதியவர் வேறு யாருமல்ல. அது ஓர் இராட்சத திமிங்கிலமாகும்.

எனினும், அந்த திமிங்கிலத்தைப் பார்த்ததும் ஆய்வுக் குழுவினர் பேராச்சரியம் அடைந்தனர். அவர்கள் பார்த்ததோ 'சாம்பல் திமிங்கிலம்' ஆகும். இத்தகைய சாம்பல் திமிங்கிலங்கள் உலகில் பசுபிக் சமுத்திர வலயத்தில் மாத்திரமே வாழ்கின்றன. இதனைத் தவிர, உலகின் வேறு எந்த இடத்திலும் இவை காணப்படுவதில்லை. அதனால், இந்த சாம்பல் திமிங்கிலத்தின் வருகையானது ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்படுகின்றது. நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு ஒரு சாம்பல் திமிங்கிலம் பசுபிக் சமுத்திர வலயத்திற்கு வெளியேயுள்ள கடல் பரப்பில் காணப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இந்தத் திமிங்கிலத்தை முதன்முதலாக மத்திய இஸ்ரவேலின் ஹர்சிலா நகரத்திற்கு அண்மையில் உள்ள கடலிலேயே கண்டனர். கடல்வாழ் உயிரினம் குறித்த ஆய்வாளர்கள் பலர் இந்த திமிங்கிலம் உணவு தேடி செல்லும்போது வழிதவறி வட பசுபிக் சமுத்திர வலயத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடந்து இங்கு வந்து விட்டதாகவே கருதுகின்றனர்.

எனினும், இது நம்பமுடியாத ஒரு விடயமாகும். உலகில் திமிங்கிலம் குறித்த மிக முக்கிய நிகழ்வும் இதுவேயாகும். அத்திலாந்திக் சமுத்திரத்தில் 18 ஆம் நூற்றாண்டிற்கு பின் சாம்பல் திமிங்கிலம் ஒன்றை ஒருபோதும் காணக்கிடைத்ததில்லை என கடல்வாழ் உயிரின ஆய்வாளர்கள் தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்துகின்றனர். குறிப்பாக இத்தகவலை கலாநிதி அவியத் ஸ்கீனின் உறுதியாகத் தெரிவிக்கின்றார். 12 மீற்றர் நீளமும் 20 தொன் நிறையும் கொண்ட இந்த சாம்பல் திமிங்கிலம். வடமேற்கில் அமைந்துள்ள ஆர்க்டிக் கடல் வழியே வந்து அத்திலாந்திக் சமுத்திரத்தினுள் பிரவேசித்திருக்கலாம் என்றே அனுமானிக்கின்றனர்.

பசுபிக் மற்றும் அத்திலாந்திக் சமுத்திரங்களை இணைக்கும் இந்த கடல் மார்க்கம் பொதுவாக பனிக்கட்டிகளாலேயே முற்றாக மூடியிருக்கும். ஒரு காலத்தில் சாம்பல் திமிங்கிலங்கள் வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் பெரும் கூட்டமாக வாழ்ந்து வந்தன. எனினும், 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் அவை அருகி அழிந்து போயின. அதன்பின் அத்திலாந்திக் சமுத்திரத்தில் சாம்பல் திமிங்கிலத்தைக் காணவே முடியவில்லை. இப்பொழுது எஞ்சியிருக்கும் சாம்பல் திமிங்கிலங்களும் கூட்டமாகத் தமது வாழ்விடத்தை வட பசுபிக் சமுத்திரத்தின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் அமைத்துக்கொண்டன.

"பசுபிக் சமுத்திரத்தில் வாழும் உயிரினமொன்று அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு வந்துள்ளமை. ஆர்க்டிக் பனிக்கட்டிப் படலம் உருகியதாலேயே ஆகும். இவ்வாறு ஆர்க்டிக் பனிப்படலம் உருக உலகம் வெப்பமடைதலே காரணமாகும். இத்திமிங்கிலத்திற்கு பெரிங் தொடு கடலுக்கு (ஜலசந்தி) அருகில் அமைந்திருக்கும் கடல் வழியாகவே அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு வர வாய்ப்புக் கிடைத்திருக்கும் என கலாநிதி ஸ்கீனின் தெளிவுபடுத்துகிறார்.


பசுபிக் சமுத்திரத்தின் வட கிழக்கு வலயத்தில் வாழும் இந்த சாம்பல் திமிங்கிலம் காலத்திற்குக் காலம் பசுபிக் சமுத்திரத்தின் வெவ்வேறு திசைகளுக்கும் இடம் பெயர்வதுண்டு. சாதாரணமாக ஒக்டோபர் மாதத்தில் தென்திசை பசுபிக் சமுத்திர வலயத்தை நோக்கிச் செல்லும். வெப்பமான நீரைத் தேடியே அவ்வாறு அவை செல்கின்றன. குறிப்பாக கலிபோர்னியா விரிகுடாவை அண்டிய பகுதிகளுக்குச் செல்லும். இந்த இடம்பெயர்வு ஏறக்குறைய 8000 கிலோமீற்றர் தூரமுள்ள நீண்ட பயணமாகும். இப்பயணத்தின்போது சாம்பல் திமிங்கிலம் வலப்புறமாகவே செல்ல வேண்டும். அதற்குப் பதிலாக பாதைமாறி இடப்புறம் திரும்பி ஆர்க்டிக்கை கடந்து அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக 'ஜிப்ரோல்டர்' ஜலசந்தியை அடைந்திருக்க வேண்டும். அத்துடன், அங்கிருந்து மத்திய தரைக்கடலுக்குள் வந்து இஸ்ரவேலின் கடற்கரைக்கு அண்மித்த பகுதிக்கு வந்துள்ளது.

இது விஞ்ஞானிகளுக்கு பெரும் ஐயங்களைத் தோற்றுவித்துள்ளது. அந்தவகையில், இத்திமிங்கிலம் ஏன் இவ்வாறு வருகை தந்தது என்பதே அந்த ஐயமாகும். பாதை மாறி வழிதவறி வந்ததா? அல்லது வாழ்வதற்குப் பொருத்தமான வேறொரு சூழலை நாடி வந்ததா? என்பதே அவர்களின் கேள்வியாகும். அவ்வாறாயின், இந்த சாம்பல் திமிங்கிலத்திற்கு வாழ்வதற்கேற்ற பொருத்தமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது மிக முக்கியமான சூழல் பிரச்சினையாகும். மற்றொரு புறம் இக்காலகட்டத்தில் நிகழும் விபரீதமானதும் அசாதாரணமானதும் மாறுபட்டதுமான காலநிலையே இத்தகைய நிகழ்வுக்கு காரணமென்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

(அ)

### வழி தவறி வந்த திமிங்கிலம்

தமது கூட்டத்தில் இருந்து விலகிய சாம்பல் திமிங்கிலமொன்று ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து இஸ்ரவேலுக்கு அருகிலுள்ள கடற்பரப்பிற்கு வந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'மல்லகம்' எனும் அபூர்வ மூலிகை

இலங்கையின் இயற்கைச் சூழல் கட்டமைப்பில் காணப்படும் மருத்துவ மூலிகைகளில் அழிந்து வரும் தாவர வகைகளில் அதிக அளவு பாதிப்பை எதிர்கொள்ளும் தாவரமாக 'மல்லகம்' எனும் தாவரம் இனங்காணப் பட்டுள்ளது.

## இத்தாவரத்திற்குரிய பெயர்கள்

Celastrus Paniculatus செலஸ்ட்ரஸ் பெனிகுலேட்டஸ் எனும் விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படும் மல்லகம் மூலிகை ஜெயாதிஸ்மத்தி அல்லது செலஸ்ட் ரேசீய் Celastraceae எனும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்த தாவரமாகும்.

'ஜோதீஷ்மதி தைலம்' எனும் பெயரில் அழைக்கப்படும் அறிவு வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் மருந்தைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மல்லகம் மகியங்கனையை சூழவுள்ள காட்டுப் பகுதியில் ஆய்வுக்குழுவினரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

## செந்தரவு ஆவணம்

இலங்கையின் இயற்கைத் தாவரப் பட்டியலின்படி, கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஹந்தானை மலைப்பிரதேசத்தில் முதன்முதலாக 'மல்லகம்' கண்டு பிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உலக இயற்கைவள பாதுகாப்புச் சங்கத்தால் வெளியிடப்பட்ட 1999 ஆம் இலங்கை செந்தரவுப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளதன்படி இத்தாவரம் 1900 ஆம் ஆண்டின்பின் இலங்கையின் இயற்கைச் சூழலில் இருந்ததற்கான எவ்வித பதிவுகளும் இல்லை. அத்துடன், அதிக அளவு அழிந்து போகும் தாவரங்களில் ஒன்றாக எச்சரிக்கை செய்யப்பட்டும் உள்ளது.

கலாசார அமைச்சின்கீழ் இலங்கையின் ஆதிவாசி மக்களின் பாரம்பரிய அறிவையும் அனுபவங்களையும் பாதுகாக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவத் தாவரங்களின் ஆய்வுகளின் விளைவாக ஊவா மாகாணத்தின் மகியங்கனையைச் சூழவுள்ள காட்டுப்பிரதேசத்தில் மல்லகம் வளர்வதாக தகவல் வெளியிடப்பட்டது. ஆயுர்வேத திணைக்களத்தில், பண்டாரநாயக்க ஆய்வு நிறுவனத்தில் பணிபுரியும் விவசாய விஞ்ஞானியான பியல் மாரசிங்க, திட்டமிடல் அதிகாரி அதுல கனகரத்ன மற்றும் வைத்திய கலாநிதி பாலித்த ஸ்ரீ கிகன ஆராய்ச்சிகே உள்ளிட்ட ஆய்வுக்குழுவினரே இதனை வெளியிட்டனர்.

உலகளாவிய ரீதியில் மல்லகம் அதிகம் வளரும் ஏனைய நாடுகளாக இந்தியா, நேபாளம், தாய்லாந்து, மியன்மார், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகள் திகழ்கின்றன.

இந்த அரிய தாவரத்தை இனங்காணுதல் மிக இலகுவானதாகும். இது மரத்தின் மீது கிளைகளைப் பரப்பி வளரும். மல்லகம் தாவரத்தின் பிஞ்சு மரப் பட்டையில் வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படும். அதில் மெல்லிய துளைகளும் காணப்படும். இலைகளோ மென்மையானவை.அதன் விளிம்பு ஒழுங்கற்றுக் காணப்படும். ஜாயாங்கி புமாங்கி என மலர்கள் வெவ்வேறாக மலரும். கிளையின் நுனியில் மலரும் இந்த மலர்கள் கொத்து கொத்தாக பூத்துக்குலுங்கும். இளம் பச்சை நிறத்தைக்கொண்ட பிஞ்சுக் காய்கள் வளர்ச்சியடைந்து செம்மஞ்சள் நிறத்தை அடையும். காயினுள் 36 விதைகள் காணப்படுகின்றன. பழுத்ததும் வெடித்து பிரகாசமான செந்நிறத்தைக் கொண்ட விதைகள் வெளியே வரும். இநத விதைகளை உணவாக உட்கொள்ள பறவைகளிடையே கடும் போட்டி ஏற்படும்.

சரியாக இதனை இனங்காணாமல் இருப்பதும் சேனைப்பயிர்ச் செய்கையின்போது, இத் தாவரத்தை வெட்டி அழிப்பதும் காடழிப்பு மற்றும் இயற்கையாக ஏற்படும் அழிவுகளாலும் நாளுக்கு நாள் அழிந்து போகும் இந்த பெறுமதியான தாவரத்தை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பது நம் அனைவரதும் கடமையாகும். (அ)





HNB சிங்கிதி

2010

கல்வி அமைச்சு



ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும்

அகில இலங்கை பாடசாலைகளுக்கான சித்திர, சிறுகதை, கட்டுரை, தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள்

**சித்திரம்**
(ஆண்டு 1-13)

சித்திரத்திற்கான விடயப்பொருள் - (1) "எனது கிராமம்"
(2) "நான் மிகவும் விரும்பும் தேசியவிழா". (3) "இயற்கையின் எழில்"
சித்திரத்தின் அளவு 18 X 14 அங்குலம்

**சிறுகதை**
(ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

**கட்டுரை**
(ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

கட்டுரைக்கான விடயப்பொருள் - "தகவல் தொழில் நுட்பமும் சிறுவர்களும்".
சொற்கள் 1000 தொடக்கம் - 1500 வரை.

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் எந்தவொரு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சித்திரம்/கட்டுரை/சிறுகதை போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 2010 ஜூலை மாதம் 30ᵗʰ திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் பேர்ஜி - 011-2661983, பிரியான் - 011-2661993

அனுசரணை : DailyMirror



HNB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாட விழு






**இன்றைய நவீன உலகில் மனித நேயம் இன்றியமையாத, மிக அவசிய, அவசரத் தேவையாகும். உலகமயமாக்கல் மூலம் மனித சமூகம் துரிதமாக மாறிவருகிறது. இதனால், இளைய சமூகங்கள் சாதகமான விளைவுகளைப் பெற்று முன்னேறி வருகின்றன. அதே சமயம், பாதகமான அதன் விளைவுகளால் சிக்குண்டு தவிக்கும் இளைய சமூகத்தினரின் எதிர்கால, வாழ்வு குறித்து ஏங்கித்தவிக்கும் பெற்றோர்களையும் காணக்கூடியதாகவே உள்ளது.**

எனவே, இன்றைய பிரதான தேவை. வளரும் சமூக உறுப்பினர்களைப் பாதுகாப்பதும் அவர்களது ஒழுக்க விழுமியங்கள் பேணப்படுதலும் பின்வருவோருக்குரிய பாரிய பொறுப்பாகும்.

1. பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள்.
2. பாடசாலை நிர்வாகம்.

குறிப்பாக, கல்வி கற்கும் மாணவ சமூகத்தினரது, கல்வி, கலாசார ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட்டு வகை கூறப்படவேண்டும். தவறின் எதிர்காலத்தில் அழிந்த அல்லது அழிவை நோக்கி நகரும் சமூகத்தை விட்டுச் சென்ற குற்றத்தை சமகால சமூகப் பொறுப்பாளர்கள் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.




கல்விப் பெறுமானத்தால், பொருளாதாரத்தை ஈட்டி மகிழ்ச்சியாக வாழ்வதைவிட, நல்ல பண்புள்ள மாணவ சமூகத்தை அடையச்செய்வதே பாடசாலைகளின் ஓர் இலக்காகும். இந்த தேர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு மாணவமணிகளை தோற்றுவித்த அன்றைய சமூகத்திற்கும் இன்றைய கவலைக்கிடமான மாணவ சமூக மாற்றத்திற்கும் அனேகமாக கீழ்வரும் நிகழ்வுகளே காரணங்களாக அமைகின்றன.

01. பெற்றோர்களின் கவனயீனம்.
02. தந்தை அல்லது தாய் வெளிநாட்டில் பணிபுரிதல்.
03. மாணவர்களது கரத்தில் பணப்புழக்கம் ஏற்பட்டமை.
04. ஒருசில ஆசிரியர்களது பொறுப்பின்மை.
05. சமூகக் கட்டுக்கோப்பு மீறப்பட்டுள்ளமை.
06. உலகமயமாதல் சிந்தனையின் பாதக விருத்தி.
07. ஆண், பெண் கலவன் பாடசாலைகள்.
08. பாடசாலையில் ஆசிரியர் விற்பனை நிலையங்கள்.
09. புத்தக அறிவை மட்டும் வைத்து வழங்கப்பட்ட பதவிகள்.
10. பயிற்சியற்ற அல்லது தற்காலப்படுத்திக்கொள்ளாத ஆசிரியர்கள்.

போன்ற காரணிகள் பாடசாலையில் கற்கும் மாணவ சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவர்களது ஒழுக்க மீறல்கள், வாழும் சமூகத்தின் கட்டுக்கோப்பை கேள்விக்குறியாக்கியுள்ளன.

## இன்றைய பின்தங்கிய பாடசாலைகள்

மாணவ சமூகம் பாதுகாக்கப்பட வகை செய்யும் பொறுப்பு மிக அவசர, அவசியமாகும். எதிர்கால சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பாடசாலைகள் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறிவுத் திறன், மனப்பாங்கு விருத்தியை வழங்க வேண்டியுள்ளது. இவற்றில், 'மனப்பாங்கு வளர்ச்சி' தான் சமூக ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்வதற்குத் தேவைப்படும் சிந்தனைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்யத் தேவைப்படும் நடவடிக்கைகள் போன்றன பாடசாலை மூலம் எடுக்கப்பட வேண்டியுள்ளது. தற்போதைய சமூகத்தில் சீரற்ற விளைவுகளால் சிறுவர் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. தற்கால சிக்கலான சமூக முறைமையினால் பாடசாலை செல்லும் மாணவ சமூகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்துடன், பல கஷ்டங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான சம்பவங்களால் பிள்ளைகளின் எதிர்காலம் இருள்மயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பல வழிகளில் மேற்கொள்ளப்படும் இன்னல்கள் தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஆளணியினருக்கு எதிராக பெற்றோர் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதையும் காண்கின்றோம்.

உலகில் சிறுவர் இன்னல்களின் நிகழ்வுகளினால், சிறுவர் உரிமை, பாதுகாப்புச் சட்டங்கள், நன்னடத்தை வேலைத்திட்டங்கள் பல, விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாடசாலை என்பது 'Student care center' மாணவர் நல பாதுகாப்பு நிலையமுமாகும். மாறாக, இது வெறும் பாரம்பரிய பாடசாலை நிறுவனம் மாத்திரமே எனக் கருதப்படக்கூடாது.

எனவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றல் கடமைப் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றத் தவறும்போது, மாணவர்கள் ஒழுக்க மீறல்களுக்கு ஆளாக அல்லது ஆளாக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்ற உண்மை ஆய்வுகளின் முடிவாகும். மாணவப் பருவம் பொன்னான நேரம், காலை முதல் மாலை நடுப் பகுதி வரையாகும். இது சிந்தனைக்கு சிறந்த காலப் பொர்ழுதாகும். இதில் பாடங்கள் நடைபெறாது மாலைப் பொழுதின் தனியார் கல்வி கலாசார முறை மூலம் கற்றலுக்குத் தூண்டப்பட்டு, சில ஆசிரியர்கள் பாடசாலையின் நேரசூசிக்கேற்ப வகுப்பறைக்குச் செல்லாது, ஓய்வெடுக்கும் அல்லது அரட்டையடிக்கும்




கலாசாரமாக இன்று பாடசாலைகள் சில மாறியுள்ளன. வகுப்பறையில் ஆசிரியர்கள் இல்லாதபோதே மாணவர்கள் பிரச்சினைகளுக்கும் குழப்படிகளுக்கும் உட்பட்டிருப்பதையும் தண்டிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருப்பதையும் பாடசாலை நிர்வாகம் தெரிந்து வைத்துள்ளது. இதனால், குற்றவாளியாகி மாணவ சமூகம் தண்டனைக்கு



உட்படுத்தப்படுகின்றது. ஆனால் யார் அங்கே நியாய பூர்வமான குற்றவாளிகள்.

## உடல் ரீதியான தண்டனைச் சட்டம்

சகல சந்தர்ப்பங்களிலும் சரீர தண்டனைக்கு மாணவர்களை உட்படுத்தக்கூடாது. இது குறித்து பல சுற்று நிருபங்கள் கல்வி அமைச்சு மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

1. 21.12.1927 இல் வெளியிடப்பட்ட E36 ஆம் இலக்க சுற்று நிருபம் (பாடசாலைகளில் சரீர தண்டனை).
2. 21 ஜூலை 1961 இல் 26 ஆம் இலக்க சுற்று நிருபம்.
3. 11.05.2005 சுற்றறிக்கை இலக்கம் 2005/17

மேற்படி, சுற்று நிருபங்களின்படி, பின்வரும் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலைகளில் ஒழுக்க மியங்களை பாதுகாத்தல்






1. சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனை வழங்குவது தவிர்த்துகொள்ளப்பட வேண்டும். அதிபர்கள், ஆசிரியர்களினால் மாணவர்களிடையே ஒழுக்க மாற்றங்களை ஏற்படுத்தும் நன்னோக்கில் சீர தண்டனைகள் வழங்குவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

2. பிரம்பை பாடசாலை மேசை மீதுகூட வைத்திருக்கலாகாது. இவ்வாறு 1927 ஆம் ஆண்டு சுற்று நிருபம் கூறுகிறது.

3. சீர தண்டனை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தண்டனை விதித்த முறை குற்றத்தின் தன்மை, கொடுக்கப்பட்ட அடிகளின் எண்ணிக்கைகள்கூட, புத்தகத்தில் பதியப்பட்டிருத்தல் வேண்டும்.

4. அடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், பிரம்பால் உள்ளங்கையில் அடிக்க வேண்டும். அதுவும் நான்கு அடிக்கு மேல் அடிக்கக்கூடாது. எனினும், சிறு பருவப் பிள்ளைகள் ஒருபோதும் தண்டிக்கப்படலாகாது.





மேலும், மாணவர்கள் கையால் அடிக்கப்படல், கட்டி வைக்கப்படல் ஆகாது.

மேற்படி, பிரம்படி கலாசாரம் குறித்த சுற்றுநிருபம் கூட, 2005 ஆம் ஆண்டு சுற்றுநிருபத்தில் மாற்றப்பட்டுள்ளது.

## உடல் ரீதியான தண்டனையின் பாதக விளைவுகள்

உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது குறித்து செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் அறிய வந்திருப்பது, பிள்ளைகளிடையே ஒழுக்க மாண்புகளை விதைப்பதற்கு கொடுக்கப்படும் தண்டனைகள் மூலம் எதிர்பார்த்த பயனை அடையமுடியவில்லை. மாறாக, பின்வரும் உளத்தாக்கங்களே பாதக விளைவாக வித்திடப்பட்டுள்ளன.

1. திருட்டு, தாக்குதல்கள், உளச்சோர்வுகள், பின்னடைவுகள், மாணவர்களிடையே ஏற்படல்.
2. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தமை.
3. மாணவர்களிடையே ஆத்திரமடையும் பழக்கங்கள் கூடியமை.
4. மாணவ-ஆசிரிய இடை வினைத் தொடர்பு, நல்லுறவு பாதிக்கப்பட்டமை.
5. திருப்தியற்ற மானிட உணர்வுகள் மேலோங்கியமை.
6. பிள்ளைகளிடம் வற்புறுத்தல் மூலம் சிறந்த சிந்தனைகளை கட்டியெழுப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படல்.
7. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாதல்.

அத்துடன், ஆய்வுகூறும் ஓர் முடிவு.

'உடல் ரீதியான தண்டனையை வழங்காது ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியாத சந்தர்ப்பத்தில் அதன் மூலம் வெளிக்காட்டப்படுவது ஆசிரியரது திறமையற்ற தன்மையே ஆகும்'. எனவே, உடல் ரீதியான தண்டனைக்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்படும் மாற்றீட்டை மேற்கொள்ளலாம்.



✸ பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட இருக்கும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்காக பாடசாலை செயற்பாடு மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கைகளை சிறந்த முறையில் திட்டமிட்டு கண்காணித்து மதிப்பிட்டு ஒழுங்கு செய்தல்.

✸ பாடசாலையின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் விளக்கமூட்டல் மற்றும் சிறந்த மகிழ்ச்சிக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல். தவறான செயற்பாடுகளை மேற்கொள்ளல். தவறான செயற்பாடுகளுக்கு உதவாதிருத்தல் அல்லது அங்கீகரிக்காதிருத்தல்.

✸ ஒழுக்க விழுமியங்களில் அதிபர், ஆசிரியர்கள் சிறந்த முன்மாதிரியாக நடத்தல். மத அறிஞர்கள், பெரியார்கள் மூலம் அடிக்கடி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

✸ மாணவர்கள் தவறிழைக்கும்போது அன்புடன், அத்தவறின் பாதிப்பை விளக்கமூட்டி அவ்வப்போது திருத்தல்.

✸ மோசமான முறையிலான ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்டபோது உடல், உள தண்டனை வழங்குவதற்குப் பதிலாக எச்சரிக்கை செய்தல் மற்றும் பெற்றோர் பாதுகாவலருக்கு அறிவித்தல்.

✸ தவறிழைத்த மாணவர் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை வரையறுத்தல் அல்லது இடைநிறுத்தல் உதாரணமாக, வகுப்புத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற பதவிகளை ரத்துச் செய்தல்.

✸ பாரிய ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்திற்கு அதிகரிக்காத வகுப்புத்தடை விதித்தல்.

✸ தண்டனை எதுவாக இருப்பினும், அது ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படல். மேற்படி, இவ்விடயங்கள் குறித்து கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தல்.

மேற்படி, நிபந்தனைகளின்படி செயலாற்றுவது மாணவர்களது எதிர்கால வாழ்வை ஒளிமயமாக அமைக்க வேண்டுமேயன்றி அவர்களை குற்றவாளிச் சமூகமொன்றாக உருவாக்குவதற்காக அல்ல என்பதை உணர்ந்து செயற்படல்.

இந்தவகையில், பாடசாலை, மாணவ சமூகத்தின் இலக்கை அடையச் செய்ய சகல வழிகளிலும் ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்த வேண்டியுள்ளனர். அழிந்து செல்லும் பாதக விளைவுகளை குறைத்து ஒழுக்கப் பண்புள்ள நற்பிரஜைகளைத் தோற்றுவிக்க பொறுப்பாளர்கள் கடுமையாக உழைக்கவேண்டியுள்ளனர். தம் கடமைகளை ஆசிரிய சமூகம் உணர்ந்து சட்டங்களுக்கு கட்டுப்பட்டு தமது ஊதியத்தை நியாயமாக்கும் விதத்தில் நீதியாக செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

**மௌலவி முஹம்மத் ஸில்மி**
(M.A.in Teacher Education)
உப பீடாதிபதி,
தேசிய கல்வியியற் கல்லூரி,
தர்ஹா நகர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சாட்

**அரசு:** குடியரசு.
**தேசிய பெயர்:** ஜும்ஹூரியத் சாட் (Republic of Chad)
**சுதந்திரம்:** பிரான்ஸிடமிருந்து, 1960 ஓகஸ்ட் 11.
**தேசிய விடுமுறை:** ஓகஸ்ட் 11.
**அதிபர்** (1990): இத்ரீஸ் டெபி.
**பிரதமர்** (2010): இம்மானுவேல் நடிங்கர்.

## புவியியல்

முழுமையாக நிலத்தால் சூழப்பட்ட நாடாகிய சாட், ஒரு வட-மத்திய ஆபிரிக்க நாடாகும். இதன் அயல் நாடுகளாக நைகர், லிபியா, சூடான், மத்திய ஆபிரிக்க குடியரசு, கெமரூன் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. நாட்டிலுள்ள சாட் ஏரியின் காரணமாகவே இந்நாட்டிற்கு இப்பெயர் வந்துள்ளது. இதன்




மேற்கு எல்லையில் நைகர் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் இருக்கின்றன. வட பகுதி சஹாரா பாலைவனத்தின் ஒரு பகுதியாகும். நாட்டின் வட பகுதியில் டிபெஸ்டி மலைத்தொடர் அமைந்துள்ளது. அதனைச் சூழ சஹாரா பாலைவனம் அமைந்துள்ளது.

சூடானுடனான கிழக்கு எல்லையில் ஏறக்குறைய 2000 அடி வரையில் நிலம் உயர்ந்து செல்கின்றது. இப்பகுதியிலேயே எண்ணடி, வடை ஆகிய மேட்டுநிலங்கள் அமைந்துள்ளன. தெற்கில் உள்ள செழிப்பான காடுகளை (ச்)சாறி மற்றும் லோகோன் ஆகிய ஆறுகள் போஷிக்கின்றன.


**மொத்தப் பரப்பு:** 496,755 ச.மைல் (1,284,000 ச.கி.மீ)
**நிலப்பரப்பு:** 486,178 ச.மைல் (1,259,201 ச.கி.மீ)
**நிலப்பிரிவுகள்:** 14 நிர்வாகப் பிரிவுகள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** நிஜாமினா.
**சனத்தொகை** (2010): 10,543,264.
**நாணயம்:** CFA ஃப்ரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச் மற்றும் அரபு (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்), சரா, இவை தவிர மேலும் 120 மொழிகள் பேசப்படுகின்றன.






(ச்)சாறி ஆறு

**இனங்கள்:** 200 வெவ்வேறு இனக்குழுக்கள். வடக்கு மற்றும் மத்திய பகுதியில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள்.தெற்கில் கிறிஸ்தவர்கள் மிகப்பெரும்பான்மையாக இருப்பதோடு,உள்ளூர் மத நம்பிக்கையினரும் உள்ளனர்.
**எழுத்தறிவு:** 25.7%
**இணையத்தளக் குறியீடு:** .td
**தொலைபேசிக் குறியீடு:** 235





தலைநகரின் ஒரு பகுதி



**தேசிய கீதம்**
Peuple Tchadien, debout et a l'ouvrage!
Tu as conquis la terre et ton droit;
Ta liberte naitra de ton courage.
Leve les yeux, l'avenir est a Toi... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.மு 500 ஆம் ஆண்டு முதல் சாட் ஏரியைச் சுற்றி குடியேற்றங்கள் உருவாகின. 1085 இல் இஸ்லாம் மதம் இங்கு பரவியது. 16 ஆம் நூற்றாண்டில் எகனம்-போர்னு, பகுய்ரிமி, அவடாய் ஆகிய மூன்று முரண்பட்ட அரசுகள் ஆதிக்கத்தை செலுத்தின. 1883க்கும் 1893க்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று அரசுகளும் சூடானிய வெற்றி வீரனாகிய ரபிஹ் அல்-ஹுபைர் என்பவனின்கீழ் வந்தன. 1900 இல் பிரான்ஸ் இவ்வரசுகள் அனைத்தையும் பிரெஞ்ச் மத்தியகோட்டு ஆபிரிக்க காலனித்துவத்தின்கீழ் கொண்டுவந்தது. 1946 இல் இப்பிரதேசம் சாட் என பெயர் பெற்று சுயாட்சி உரிமையுள்ள நாடாக பிரான்ஸிடம் இருந்து விடுதலை கோரியது. 1960 ஓகஸ்ட் 11 ஆம் திகதி பிரான்ஸிடம் இருந்து சுதந்திரமடைந்து, அதன் முதல்வராகவும் அதிபராகவும் பிரான்கொய்ஸ் டொம்பல்பேயி தெரிவானார்.







## காலநிலை




தேசிய இலச்சினை

நாட்டின் சஹாரா பாலைவனப் பகுதி வெப்பமும் வறட்சியும் நிறைந்தது. மிகச்சிறிய அளவில் மழைவீழ்ச்சி உண்டு.குளிரான தென்-மத்திய சஹெல் பகுதி 15 அங்குல மழைவீழ்ச்சியைப் பெறுகிறது. 30 அங்குல மழைவீழ்ச்சியைப் பெறும் தென் பிராந்தியம் 28°C வெப்பத்தைக் கொண்டுள்ளது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2004): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்-13000; செல்லிடத் தொலைபேசிகள்-210,000. **வானொலி நிலையங்கள்** (2002): AM 2, FM 4, SW 5. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 1. **இணையத்தள வழங்குனர்கள்:** 9; இணையத்தளப் பாவனையாளர்கள் (2005): 35000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 33400 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டது-267 கி.மீற்றர்; செப்பனிடப்படாதது-33133 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2002): (ச்)செறி மற்றும் லோகோன் ஆறுகள் என்பன ஈரப்பருவ காலத்தில் மட்டும் படகுச் சேவைகளுக்கு உகந்ததாகக் காணப்படுகின்றன. **விமான நிலையங்கள்** (2006): 52.

## கலாசாரம்

பல்வேறு இனக்குழுக்களைக்கொண்ட இந்நாட்டின் பல்வேறு பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. பல்வேறு வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி இசைக்கும் ஒருவகை இசை இங்கு பிரபலமானது. உணவு வகைகளில் மீன் பிரதானமாக விளங்குகின்றது. கார்காஜி எனும் இனிப்புப் பானம் சப்பாத்துப் பூமரத்தின் இலைகளில் இருந்து தயாரிக்கப்படுகின்றது.

## பொருளாதாரம்

**விவசாயம்** (விவசாய நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பருத்தி, தானியங்கள், உருளைக்கிழங்கு, மரவள்ளி, மாடுகள், செம்மறி ஆடுகள், ஆடுகள்,ஒட்டகங்கள். **கைத்தொழில்கள்:** எண்ணெய், பருத்தி ஆடை, நெசவு, இறைச்சி பொதி செய்தல். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், யுரேனியம், நெட்ரோன், தங்கம், சுண்ணக்கல், மணலும் சரளைக்கற்களும், உப்பு. **ஏற்றுமதிகள்** (2009): பருத்தி, ஆடு-மாடுகள், எண்ணெய். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்களும் உதிரிப்பாகங்களும். கைத்தொழில் பொருட்கள், உணவுப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, சீனா, போர்த்துக்கல், பிரான்ஸ், கெமரூன், ஜேர்மனி, பெல்ஜியம்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ ஒக் தேசிய வனவிலங்கியல் பூங்கா ✱ பஹ்ர் ஸலாமத் விலங்கியல்சாலை ✱ கோஸ் பெய்டா தேசிய வனவிலங்கியல் பூங்கா ✱ ஷாட் தேசிய நூதனசாலை ✱ ஸகோமா தேசிய வனவிலங்கியல் பூங்கா ✱ (ச்)சாறி ஆற்றுமுகம் ✱ ஸார்ஹ் தேசிய நூதனசாலை ✱ எண்ணடி மேட்டுநிலம் ✱ டிபெஸ்டி மலைகள்.

எண்ணடி மேட்டுநிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துவன



## கல்வி முகாமைத்துவம் - 13

### கற்றலுக்கான ஆலோசனைகள்

உளவியல் கோட்பாட்டின் படி, ஒரு மாணவனுக்கு ஊக்கத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளாக இரண்டு காரணிகள் குறிப்பிடப்படுகின்றன.

1. வெகுமதி (பரிசு)
2. தண்டனை

### வெகுமதி

அதாவது; கற்கும் மாணவனைப் புகழ்தல், பரிசு வழங்கல், பாராட்டல், தன்னம்பிக்கையை ஊட்டல் என்பன. வற்றை ஒரு மாணவனை ஊக்குவிப்பதற்கான வெகுமதியாக வழங்கலாம். இவ்வாறு செய்யும்போது படிக்கும் மாணவனுக்கு அது மகிழ்ச்சியுணர்வை அளிப்பதால், குறிப்பிட்ட விடயத்தில் மீண்டும் திறனுடன் செயற்பட ஊக்குவிப்பதாக அது அமையும். குறித்த விடயம் தொடர்பில் அக்கறை, உற்சாகம் என்பனவற்றைத் தோற்றுவிக்கும். திருப்தி அளிக்கும். முன்னேற்றம் அடையத் தூண்டும்.

### தண்டனை

அவ்வாறே, செய்த தவறுக்காகத் தண்டனை வழங்குவதானது, குறித்த மாணவனின் தவறைத் திருத்திக் கொள்ள ஊக்குவிக்கும். தண்டனை என்பது வலியுணர்வைக் கொண்டுள்ளதால், ஒரு மாணவன் தவறு செய்ய அஞ்சுவான். இதனால், அவனது செயற்பாடுகள் நல்ல விடயங்களை நோக்கிப் பயணிக்க ஊக்கம் கைகொடுக்கும். தவறுகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கினால் அவை கற்பதற்குத் தகுந்த-நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.



உதாரணமாக; ஒரு மாணவன் தனது முதலாம் தவணைப் பரீட்சையில் குறைவான பெறுபேறுகளைப் பெற்றால், அவனது பெற்றோர் அதற்காக அவனுக்குத் தண்டனை வழங்கும்போது (இங்கு தண்டனை என்பது மாணவன் ஒருவனது உள்ளத்தைப் பெரிதாகப் பாதிக்காமல், அவர்களைத் திருத்தி, சிந்தனை செய்வதாக அமைய வேண்டும்) அவன் நன்றாகப் படித்து இரண்டாம் தவணைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாய்ப்பு ஏற்படும். தண்டனையால் அனைத்து மாணவர்களுக்கும் ஊக்கம் ஏற்படாது. மாறாக; சமதிறமை உள்ள, ஆளுமை உள்ள மாணவன் ஒருவனை உருவாக்க அது வழிவகுக்கும். எனவே, ஊக்கத்துடன் இணைந்த கற்றல் எதிர்காலத்தில் சிறந்த பலனை தேடித் தரும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# சூரியனில் நிலநடுக்கம் ஏற்படுமா?

சூரியனின் மேற்பரப்பில் 6000° கெல்வின் வெப்பநிலை நிலவுகின்றது. இந்த வெப்பநிலையில் அனைத்துப் பொருட்களுமே வாயுநிலையில்தான் இருக்கும். சூரியனில் திட, திரவ நிலையில் எந்தப் பொருளும் இருக்க வாய்ப்பில்லை. அதனால், அங்கு நிலநடுக்கம் ஏற்படுவதில்லை.



ஆனால், சூரியனின் மேற்பரப்பில் சூரியக்காற்று, சூரியப்புள்ளிகள் போன்ற வேறு பல நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

# முதல் செயற்கைக்கோள்கள்

- இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் (1975): **ஆர்யபட்டா**
- ரஷ்யாவின் முதல் செயற்கைக்கோள் (1957): **ஸ்புட்னிக்-1**
- அமெரிக்காவின் முதல் செயற்கைக்கோள் (1958): **எக்ஸ்ப்ளோரர்**
- சீனாவின் முதல் செயற்கைக்கோள் (1970): **டொங் ஃபேங் ஹொங்**
- ஃபிரான்ஸின் முதல் செயற்கைக்கோள் (1965): **எஸ்டெரிக்ஸ்**
- ஜப்பானின் முதல் செயற்கைக்கோள் (1970): **ஓசுமி**










# விண்வெளியில் விண்வெளி வீரர் ஒருவர் எப்படி சாப்பிடுகிறார்; தூங்குகிறார்; கழிவை வெளியேற்றுகிறார்?





விண்வெளியில் எவ்வகையான உணவுகளையும் சாப்பிடலாம். ஆனால், ஒரு துணுக்கைக்கூட தவற விட்டுவிடக் கூடாது. இல்லையெனில்; உணவோ, நீர்த் துளியோ விண்கலத்துக்குள்ளேயே மிதந்துகொண்டு இருக்கும். அத்துடன், நீர் மற்றும் பழச்சாறு என்பனவற்றைப் பருக விசேடமான குழாய்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

விண்வெளியில் மேலே, கீழே என்று எந்த நிலையும் கிடையாது என்பதால், எப்படி இருந்தபடியும் தூங்கலாம். அத்துடன், இங்கு கழிவுகளை நீக்குவதற்காக சிறப்பு சுகாதாரப் பைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், விண்வெளி நிலையத்தின் ஜன்னலைத் திறந்து அக்கழிவுகளை வெளியே எறிய முடியாது!

# விண்வெளித் தகவல்கள்



# விண்மீன் கூட்டங்கள்

அண்டம் என்பது சின்னஞ்சிறிய நுண்துகள்களிலிருந்து மிகப்பெரிய விண்மீன் கூட்டங்கள் (Galactic Super cluster) வரை அடங்கும். சுமார் 10,000 கோடி விண்மீன் கூட்டங்கள் (Galaxy) அண்டத்தில் மிதப்பதாகவும் ஒவ்வொரு விண்மீன் கூட்டத்திலும் சுமார் 10,000 கோடி நட்சத்திரங்கள் இருப்பதாகவும் வானவியலாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

அண்டத்தின் உருவாக்கம் குறித்து அறிவியலாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாட்டின்போது, சுமார் 1500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெருவெடிப்பு அல்லது பெரும்பிரளயம்தான் (Big Bang) இந்த 'அண்டம்' என்பதாகும். 'பெருவெடிப்பு' நிகழ்வுக்குப் பின் அந்தக் காலகட்டத்தில் அண்டம் என்பது 10000° உயர் வெப்பநிலையில் வெறும் வாயுக்களாலான ஒரு மிகப்பெரிய தீக்கோளமாகும். அது





விரிந்து பரவிப் பரவி குளிரும் தன்மை உடையதாக இருந்தது. வெப்பம் தணியத் தொடங்கியதும் முதலில் அணுக்கருவின் நுண்துகள் உருவாகி, அதன் பின்னரே புரோட்டன் எலக்ட்ரோன் என்பன உருவாகின.

அதனை அடுத்து, ஒரு மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் அணுக்களின் ஈர்ப்பு விசை, வெப்பநிலை தணிதல் போன்ற காரணங்களால் ஹைட்ரஜன், ஹீலியம், லித்தியம் ஆகிய அணுக்கருக்கள் உருவாகி, அவை விண்மீன் கூட்டங்கள் உருவாக அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. தொடர்ந்து அணுக்கரு இணைவு, வெப்பம், குளிர்தல், ஈர்ப்பு விசை ஆகிய காரணங்களால் சுமார் 500 கோடி ஆண்டுகளுக்குப் பின் விண்மீன் கூட்டங்கள் உருவாகி, பின்னர் அவற்றிலிருந்து நட்சத்திரங்கள் உருவாகியிருக்கும் என்பதோடு, இந்த விண்மீன் கூட்டங்கள் கொத்துக் கொத்தாக (Super cluster) அண்டவெளியில் ஈர்ப்பு விசையினால் குறிப்பிட்ட இடங்களில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்றும் வானவியலாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II (கடந்த வாரத் தொடர்ச்சி)

சுட்டெண்: ..................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

26. அரச இலச்சினையிலுள்ள  இவ்வடிவம் வெளிப்படுத்தும் கருத்து;

(1) தூய்மை (2) தர்மம் (3) சௌபாக்கியம்
(4) உலக நிலைப்பாடு

27. பாடசாலை மாணவர்களால் ஆக்கப்படக்கூடிய புத்தளிப்புக் கருவி;

(1) சல்லாரி (2) கொம்பு (3) ரம் (4) தம்பட்டம்

28. கிராமிய விளையாட்டு எது?

(1)  (2)  (3)  (4) 

★ **நான்கு பூக்களின் வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பெயர்களிடையே ஒவ்வொரு வரிப்படத்திற்கும் உரிய பெயரைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை வரிப்படத்தின் கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**


| | | | |
|---|---|---|---|
| 1. அகத்தி | 2. கடதாசிப் பூ | 3. நீல அல்லி | 4. லில்லிப் பூ |
| 5. குண்டுமல்லிகை | 6. ஓர்கிட் | 7. சூரியகாந்தி | 8. தாமரை |

29.  30.  31.  32. 

.................. .................. .................. ..................


★ **உருவில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவிகளை இனங்கண்டு, அவற்றின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. தாளம் | 2. கொம்பு | 3. புல்லாங்குழல் | 4. ரம் |
| 5. மரக்காஸ் | 6. வயலின் | 7. தம்புரா | |

33.  34.  35.  36. 


.................. .................. .................. ..................


37. தோட்டமொன்றிலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை 3700 ஆகும். அவற்றில் 899 தேங்காய்கள் விற்கப்பட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது? ..............................

38.  இவ்வுருவில் தனியாக அமைந்த 9 சிறிய முக்கோணிகள் உள்ளன. இவ்வாறான 86 முக்கோணிகளில் உள்ள சிறிய முக்கோணிகள் எத்தனை?..............................

39. 720 மாம்பழங்கள் 4 பைகளில் சமனாக இடப்பட்டன. ஒரு பையில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?..............................

40. மோட்டார் வாகனமொன்றில் 27l பெற்றோல் இருந்தது. பயணமொன்றின் பின்னர், அதில் 19l 850 ml பெற்றோல் எஞ்சியிருந்தது. பயணத்திற்கு செலவாகிய பெற்றோலின் அளவை லீற்றர், மில்லிலீற்றரில் தருக. ..............................

41.  இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
..............................

42.  இவ்வுருவின் சுற்றளவைக் காண்க. ..............................

43. கணித செய்கையை அவதானித்து, அடைப்புக்குள் வரவேண்டிய இலக்கத்தை எழுதுக.

(1)
```
  □ 4 8
+ 1 □ 6
  9 1 4
```
(2)
```
  □ □ 7
- 2 6 9
  3 6 8
```

44. 6m நீளமான கம்பித்துண்டு ஒன்றில் 2m 75cm நீளமுள்ள ஒரு துண்டு வெட்டப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது? ..................m ..................cm

45. வெற்றிடத்தில் வரவேண்டிய சமவலுப் பின்னங்களுக்குரிய இலக்கங்களை எழுதுக. $\frac{3}{7} = \frac{\square}{14} = \frac{18}{\square}$




46. கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலை அவதானித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | விலை | |
|---|---|---|
| | ரூ. | சதம் |
| சீனி 1 kg | 58 | 00 |
| உருளைக்கிழங்கு 1kg | 75 | 00 |
| சிவப்புப் பருப்பு 500kg | 52 | 50 |
| வெங்காயம் 250g | 18 | 50 |
| பாசிப்பயறு 1kg | 83 | 50 |
| கடலை 500g | 84 | 00 |

(1) 1kg 250g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
..............................

(2) 2kg 250g சிவப்புப் பருப்பு வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ..............................

(3) முரளி 1kg 750g கடலையை வாங்கி, கடைக்காரனுக்கு ரூபாய் 500.00 பணத்தைக் கொடுத்தான். கடைக்காரன் அவனுக்கு மீதியாக கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
..............................

47. நிசாட் 07:45 மணித்தியாலத்திற்கு பாடங்களைப் படிக்கத் தொடங்கி, 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நிறுத்தினான். நிசாட் பாடங்களைப் படித்து முடித்த நேரம் யாது?..............................

48. பின்வரும் பந்தியை வாசிக்க.

வயோதிபர் ஒருவர் தள்ளாடியபடி நடந்து வருகின்றார். அவர் வீதியைக் கடக்க முற்படுகின்றார். தூரத்தில் ஒரு வாகனம் வேகமாக வந்துகொண்டிருக்கின்றது. வீதியோரத்தில் சற்றுத் தொலைவில் ஒரு சிறுவன் வந்துகொண்டிருக்கின்றான்.............

இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விவரிக்கும் ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்)

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................

## வினாத்தாள் II இன் விடைகள்

***(ஜூலை 21, 28 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)***

(01) (i) றோசாப் பூ (ii) சிவப்பு, வெள்ளை (iii) அன்பு, கருணை, நேசம் (iv) முட்கள் (v) சின்னச் சின்ன, வண்ண வண்ண (vi) வட்டமான (vii) இரையும் (viii) பள பள (ix) காலை நேரம் (x) இதழ்கள் விரித்துச் சிரிக்கின்றன

(02) (i) சீடன் தனது குருவிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான்.
(ii) தாத்தாவும் பேரனும் திகைத்துப்போய் அசையாமல் சிறிது நேரம் நின்றனர்.

(03) (i) உதவி செய்தல்
(ii) கொடுத்த வாக்கை மீறுதல்/பொய் சொல்லுதல்/பேச்சுறுதி தவறுதல்

(04) (i) தீர்க்கதரிசி (ii) ஒத்திகை

(05) (i) சவர்க்காரம் (ii) இகழ்ச்சி

(06) (i) Butterfly (ii) Sun flower (iii) Scissor

(07) (i) இரவு வணக்கம் (ii) தயவு செய்து உள்ளே வாருங்கள்
(iii) உங்கள் பெயர் என்ன?

(08) உங்கள் அப்பாவின் பெயர் என்ன? எனது அப்பாவின் பெயர் நிமல்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| (09) 2 | (10) 3 | (11) 3 | (12) 4 | (13) 2 | (14) 1 |
| (15) 2 | (16) 2 | (17) 3 | (18) 3 | (19) 2 | (20) 3 |
| (21) 3 | (22) 4 | (23) 2 | (24) 2 | (25) 1 | (26) 2 |
| (27) 1 | (28) 1 | (29) 3 | (30) 4 | (31) 6 | (32) 5 |
| (33) தாளம் | (34) மரக்காஸ் | | (35) வயலின் | | (36) கொம்பு |
| (37) 2801 | (38) 774 | (39) 180 | (40) 7l 150ml | | (41) 7 |

(42) 22cm (43) (1) 7, 6 (2) 6, 3
(44) 3m 25cm (45) 6, 42
(46) (1) 72.50 (2) 236.25 (3) ரூபாய் 206.00
(47) 11.30 மணித்தியாலம்
(48) எழுவாய், பயனிலையுடன் ஆறு வாக்கியங்கள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட தொடர்பாடல் வரலாறு

**ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக நாம் பல்வேறு வழிமுறைகளைக் கையாள்கின்றோம். இந்த தொடர்பாடல் முறை பண்டைய காலம் முதல் இன்று வரையில் இருந்து வருகின்றது. அதேவேளை, தொடர்பாடல் முறையில் இன்றளவில் பாரிய வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கின்றது**




தகவல் பரிமாற்றமானது ஐந்து வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தொடுகை உணர்வு, முகர்தல், சுவை, ஒலி, ஒளி என்பனவே அந்த ஐந்து அடிப்படை வழிமுறைகளுமாகும். மனிதன் சகல விடயங்களையும் அறிந்தும் உணர்ந்தும் கொள்வது இவ்வழிகளின் ஊடாகவாகும். ஆதி மனிதனிலிருந்து இன்றுவரை தொடர்பாடல் முறையானது சிறந்த வளர்ச்சிக் கட்டத்தை அடைந்திருப்பதோடு, தற்போதளவில் அடிக்கடி பேசப்படும் ஒரு விடயமாகவும் அது மாறியிருக்கின்றது.

காலத்தின் தேவைகளுக்கேற்ப தொடர்பாடலும் தொடர்புசாதனங்களும் வணிக மயப்படுத்தப்படுவதோடு, இலகுவில் தொடர்பை மேற்கொள்ளும் வகையிலான நவீன தொடர்பு சாதனங்களால் பணிகளும் இலகுபடுத்தப் படுகின்றன.

## தொடர்பாடல் என்றால்....


எமது அன்றாட செயல்களை தினக் குறிப்பேட்டில் பதிவு செய்து வைப்பதாயின், அதில் முதலில் எதை எழுதுவதென்று சிந்திப்போம். தொலைக்காட்சி பார்த்தோம், பிரயாணம் மேற்கொண்டோம், நண்பர்களுடன் உலாவினோம், வீட்டு வேலைகள் செய்தோம் என்றெல்லாம் நிகழ்வுகளைக் குறித்துக்கொள்வோம். இவற்றுக்கிடையில் நாம் காணக்கூடிய பொதுப்பண்பு என்ன?; அதுதான் 'தொடர்பாடல்' என்ற விடயம். அந்த ஒவ்வொரு செயற்பாட்டின் மூலமும் குறித்துக்காட்டப்படுவது தொடர்பாடலாகும்.

உலகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு ஆய்வு முடிவுகளின்படி, மனிதன் ஏனைய அனைத்து செயற்பாடுகளையும் விட கூடுதலான நேரத்தைச் செலவிடுவது தொடர்பாடலுக்கே ஆகும் என்பது தெளிவாகியுள்ளது. அந்தளவுக்கு மானிட வரலாற்றில் தொடர்பாடல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

எனினும், தொடர்பாடல் என்றால் என்ன? என்பதற்குத் தெளிவான ஒரு வரைவிலக்கணத்தை இதுவரை கூறமுடியாதிருக்கின்றது.

## தொடர்பாடலுக்கு பொருள் கூறல்

மனிதர்களுக்குப் பொருந்தாத ஏனைய விடயங்களைச் சுட்டிக் காட்டவும் 'தொடர்பாடல்' எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, விலங்குகள் ஒவ்வொன்றுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதையும் 'தொடர்பாடல்' எனலாம்.




அதேபோன்று இலத்திரனியல் சாதனங்களின் மூலம் நடைபெறும் சமிக்ஞைகளும் தொடர்பாடலாகும்.

'தொடர்பாடல்' என்ற சொல்லை நாம் அதிகம் பயன்படுத்துவது மனிதர்களிடையே நடைபெறும் தொடர்பாடலைக் குறிப்பதற்காகும். அதனால்தான், அந்த தொடர்பை 'வெகுஜன தொடர்பாடல்' என்றழைக்கின்றோம். இன்னுமொரு வகையில் கூறின், மனிதர்கள் தங்களுக்கிடையே உணர்வுகள், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளல்' என்பதுதான் தொடர்பாடல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது என்றும் கூறலாம். உண்மையில் 'தொடர்பாடல்' என்பது இலகுவான ஒரு விடயமாக இருந்தாலும் அதன் உள்ளர்த்தம் மிகவும் ஆழமானதாகும்.

## 'மக்களிடையே பொதுவானது'

'சமிக்ஞை' என்பதன் ஊடாக 'அறிவித்தல்' என்பதை உணர்த்தும் பதமே தொடர்பாடலுக்கான பொதுவான அர்த்தமாகக் கொள்ளப்படுகின்றது. இதனை நாம் ஆங்கிலத்தில் 'Communication' என்கின்றோம். இந்தச் சொல்லானது Communism (பொதுவுடமை) என்ற சொல்லில் இருந்து உருவானதாகவே கொள்ளப்படுகின்றது. பின்னர், இதனூடாக பகிர்ந்துகொள்ளல், பரிமாற்றிக்கொள்ளல், பொதுவானது, கூட்டானது போன்ற அர்த்தங்களை வெளிப்படுத்தும் வகையில் Communicate, Communicare போன்ற ஆங்கிலச் சொற்கள் உருவாகின.

(12, 13 ஆம் பக்கங்களைப் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# மானிட தொடர்பாட


## பண்டைய தொடர்பாடல் முறை

பண்டைக்கால மனிதர்கள் தொடுகை உணர்வு, முகர்தல், சுவை, ஒளி, ஒலி ஆகிய ஐந்து வழிமுறைகளின் ஊடாகவே தொடர்பாடலை மேற்கொண்டு வந்துள்ளனர். ஆதிமனிதன் பல்வேறு மிருகங்களையும் அவற்றின் பல்வேறு ஒலிகளையும் செவிமடுத்துள்ளான். மழைத்துளிகள் மேனியில் படும்போது மழை பொழிவதாக உணர்ந்தான். காட்டில் பூத்துக் குலுங்கும் மலர்களை முகர்ந்து, அவற்றின் வாசனையை அறிந்துகொண்டான். பழங்களின் நறுமணத்தைக்கொண்டு அவை கனிந்திருக்கின்றன என்பதை அறிந்துகொண்டான்.

அத்துடன், தனிமையைப் போக்க கூட்டமாக அல்லது குழுக்களாக வாழப் பழகினான். இவ்வாறு கூட்டமாக வாழ்ந்தபோது, காட்டில் உணவு தேடுவதில் ஒருவருக்கொருவர் உதவிகளைச் செய்து வந்தனர். அன்றாடம் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் இருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். இந்த சூழ்நிலையில் ஒருவருக்கொருவர் தமக்கிடையிலான உறவைப் பலப்படுத்திக் கொள்ள தொடர்பாடல் தேவைப்பட்டதால், அதற்கான வழிமுறைகளைத் தேடினர். ஆரம்பத்தில் அவர்கள் தாம் கண்ட, கேட்ட, அறியக் கிடைத்த விடயங்களுக்கு மட்டும் தம்மை மட்டுப்படுத்தியிருந்தனர். அதற்காக மேற்கூறிய ஒலி, சைகை, தொடுகை உணர்வு போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தினர்.


## பண்டைய ஓவியர்





பண்டைய மனிதர்கள் தமது உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு ஓவியங்களையும் நடனங்களையும் ஆதாரமாகக்கொண்டனர். வேட்டையாடலின்போது பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் கஷ்டங்களையும் வேட்டைக்குச் செல்லாத தமது குழந்தைகளுக்கும் குழுவினருக்கும் புரிய வைப்பதற்காக இவ்வாறான வழிகளைக் கையாண்டனர். இதற்கு உதாரணமாக; பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'லஸ்கொவ்' குகை ஓவியங்களைக் குறிப்பிடலாம். இன்றும் பாதுகாக்கப்படுகின்ற இந்தக் குகை ஓவியங்களில் பண்டைய மனிதனின் வாழ்க்கை, வேட்டையாடிய விதம், நடத்தை பற்றி பல தகவல்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றன.

எனவே, ஓவியமும் ஆதி மனிதனின் ஒரு தொடர்பாடல் வழிமுறையாகும்.



லஸ்கொவ் குகை ஓவியம்

## குறியீடுகளின் அவசியம்


மானிட வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக, வேட்டையாடுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த மனிதன்



விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல் ஆகிய தொழில்களிலும் ஈடுபடலானான். இத்தொழில்களில் புதிய கருத்தை வெளிப்படுத்தவும் அந்த செயற்பாடுகளுடன் ஒத்த செயற்பாடுகளைக் குறிப்பிடவும் குறியீடுகளின் தேவை ஏற்பட்டது. தமது உற்பத்திகளை ஏனையவர்களுடன் பண்டமாற்றம் செய்ய வேண்டிய தேவையும் அந்த கொடுக்கல்-வாங்கல்களைப் பதிவு செய்ய வேண்டிய தேவையும் ஏற்பட்டன. அதற்காக, அவர்கள் முதலில் மரக்குற்றிகளிலும் கற்களிலும் குறியீடுகளை இட்டனர். 'இன்கா' என்ற இந்திய பழங்குடியினர் கயிறுகளில் முடிச்சுப் போடுவதன் மூலம் இத்தகைய கொடுக்கல்-வாங்கல்களைக் குறித்துக்கொண்டனர். இதற்கு 'குய்பு' (Quipu) என்ற கயிற்றைப் பயன்படுத்தினர். ஆதி மனிதன் கருத்துப் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்காக கையாண்ட தொடர்பாடல் வழிமுறையாகவே குறியீடுகள் அமைகின்றன.



## தொடர்பாடல் முறை




தொடர்பாடல் முறையானது செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள தொடர்பை ஏற்படுத்துபவர், விடயம், ஊடகம், தகவலைப் பெறுபவர் ஆகிய நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது. இந்த நான்கு அம்சங்களும் அதன் ஊடாக நடைபெறும் முக்கிய ஐந்து காரணிகளை அடிப்படையாக வைத்தே காட்டப்படுகின்றன. தகவல்களை வெளிப்படுத்தல், உணர்வுகளை வெளியிடல், சிந்தித்தல் மற்றும் சிந்தனைக்கு வழியமைத்தல், தாக்கத்தை ஏற்படுத்தல், சமூகத்தின் தேவையை நிறைவு செய்தல் ஆகிய விடயங்களே அவையாகும்.

இங்கு தொடர்பை ஏற்படுத்துபவர் தகவலை தெரிவிப்பவராவார். இவர் தனது கருத்து, உணர்வுகள் அல்லது ஏதாவது ஒரு விடயத்தை பல்வேறு விதங்களில் பெறுநருக்கு வழங்குவதானது 'தகவல்' அல்லது 'செய்தி' எனப் படுகின்றது. அந்தத் தகவலைக் கொண்டு செல்வதற்காக கையாளும் வழிமுறையாக மொழி அல்லது அதை பெற்றுக்கொள்பவருக்கு கிடைக்கச்செய்யும் வழிமுறை (நூல், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி) ஆகியன 'ஊடகம்' எனப்படுகின்றது. இந்த தொடர்பாடல் முறையின் இறுதியில் இருப்பது அத்தகவலைப் பெறுபவர் (பெறுநர்) ஆவார். தொடர்பாடல் முறை முழுமை பெறவேண்டின், அறிவிப்பவரும் தகவல் பெறுநரும் முக்கியமாகக் கருதப்படுகின்றனர்.


## மானிட தொடர்பாட

ஆரம்பத்தில் பல்வேறு தொனிகளை எழுப்புவதன் ஊடாக தகவல்களைப் பரிமாறிக்கொண்ட மனிதனுக்கு காலம் செல்லச்செல்ல மற்றவர்களுடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவை அதிகரிக்கலாயிற்று. ஆரம்பத்தில் சைகைகள் மூலமும் குறியீடுகள் மூலமும் இச்செயற்பாட்டை மேற்கொண்ட மனிதன், பின்னர் மொழியை இதற்கு பிரதான ஊடகமாகக் கையாண்டான். அதற்காக பல நுட்பங்களையும் கருவிகளையும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான்.

எனினும், மொழியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட தூரத்தில் இருப்பவர்களோடு மட்டுமே தகவலைப் பரிமாற முடிந்தது. அதனால், தொலைவில் இருப்பவர்களோடு தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேறு வழிகளைக் கையாள வேண்டியிருந்தது. அதற்காக நெருப்பு மூட்டி புகை வெளிப்படுத்துதல், பறவைகளைப் பயன்படுத்தல், மத்தளம் கொட்டுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல் வரலாறு



## நெருப்பு மூட்டி சமிக்ஞை வெளியிடல்



ஆபத்துக்களை வெளிப்படுத்தவும் அறிவிக்கவும் அல்லது எதிரிகளால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்களை அறிவிக்கவும் பிரமாண்டமான அளவில் நெருப்பு மூட்டி அதன் மூலம் வெளிப்படும் பாரிய புகையூடாக தகவலைப் பரிமாறினர். ஒரு பகுதியினரால் இவ்வாறு நெருப்பு மூட்டி வழங்கிய தகவலைப் பெற்றுக் கொண்ட மற்றைய பகுதியினர், அவர்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கும் அதே வழியில் தகவலை வழங்கினர். இவ்வாறாக அந்தத் தகவல் இடத்திற்கிடம் அனுப்பப்பட்டது.

## 'ஹூ' ஒலி எழுப்பல்



இன்றளவிலும் சில கிராமப் புறங்களில் 'ஹூ' சத்தத்தை எழுப்பி, மக்களுக்குத் தகவல்களை வழங்கும் வழக்கம் இருக்கின்றது. நெல் அறுவடைக்கு சுற்றத்தினரை ஒன்று சேர்த்தல், வீட்டுக்கூரைக்கு ஓலை வேய்வதற்கு ஆட்களை வரவழைத்தல், ஆபத்தை அறிவித்தல் போன்றவற்றுக்காக இந்த 'ஹூ' ஒலி எழுப்பும் முறை பின்பற்றப்படுகின்றது. இந்த சத்தத்தை செவிமடுப்பவர்கள் அதன்மூலம் இத்தகைய தகவல்தான் தரப்படுகின்றன என்பதை அறிந்து, ஓசை வந்த திசையில் ஒன்று சேர்கின்றனர்.

## ...டல் பரிணாமம்


'ஹூ' ஒலி எழுப்புதல், உயர்ந்த மலைகளில் ஏறி பல்வேறு சமிக்ஞைகளை வழங்குதல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு தொலைவில் உள்ளவர்களுக்குத் தமது தகவல்களை அறிவித்தனர்.

## மத்தளம் கொட்டுதல்



மத்தளம் கொட்டி ஓசை எழுப்புவதும் பண்டைய கால தகவல் பரிமாற்ற முறைகளில் ஒன்றாகும். மங்கள தாளம் எழுப்புவதனூடாக சிறப்பு விருந்துகள், திருமண அறிவித்தல்கள் செய்யப்பட்டன. அதேபோன்று மரணச் செய்திகளை அறிவிக்கவும் இம்முறையைக் கையாண்டனர். அரச காலத்தில் அரசனின் கட்டளை, தீர்மானங்களை மக்களுக்கு அறிவிப்பதற்காகவென்றே ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## மணி ஓசை



உயரமான ஓரிடத்தில் மணி தொங்கவிடப்பட்டு, நீண்ட கயிற்றின் உதவியுடன் அது அடிக்கப்படும்போது தகவல் அறிவிக்கப்படுவதை மக்கள் அறிந்துகொள்வர். அந்த வகையில், முக்கிய அறிவித்தல்கள், ஆபத்துக்களை அறிவித்தல் என்பவற்றுக்காக மணி ஓசை எழுப்புவது வழக்கமாக இருந்தது.

## வதந்திகள்



தொன்றுதொட்டு இன்று வரையில் இருந்து வரும் தொடர்பாடல் முறைகளில் ஒன்றே தனிநபர் அல்லது இருவரை மையமாகக் கொண்ட தொடர்பு வழியாகும். இதன்மூலம் வதந்திகள் பரப்பப்படுவது முக்கியமானதாக இருந்திருக்கின்றது. எனினும், இந்த தொடர்பாடல் முறையால் மக்கள் மத்தியில் பதற்றத்தை, குழப்பத்தை தோற்றுவிக்க முடியும். அதனால், வதந்திகளைப் பரப்புவதைத் தடை செய்ய ஆட்சியாளர்கள் முற்பட்டனர். அதற்காக தண்டனைகள் வழங்கிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

## பறவைகள் ஊடாக தகவல் பரிமாற்றம்



பறவைகளைப் பயன்படுத்தி தகவல் பரிமாறும் முறை நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கின்றது. புறா, கழுகு, கிளி போன்ற பறவைகள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. பனை ஓலையில் அல்லது வேறெதிலும் எழுதப்பட்ட தகவலை சுருட்டி பாதுகாப்பான முறையில் பறவையின் பாதத்தில் கட்டிவிட்டால், அப்பறவை அதனை சுமந்து உரிய இடத்திற்குச் செல்லும். அங்குள்ளவர்கள் பாதத்திலுள்ள ஓலையை கழற்றி எடுத்து அத்தகவலைப் பெற்றுக்கொள்வர். இதற்காக குறித்த பறவைகளுக்கு நன்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் புறாக்களே இதற்காக பயன்படுத்தப்பட்டன.

## நிறங்களைப் பயன்படுத்தல்



நிறங்களைக்கொண்டு தகவல்களைப் பரிமாறும் முறையும் பண்டைய காலம் தொட்டு இருந்து வருகின்றது. உ+ம் : சிவப்பு நிறம் ஆபத்தை அறிவிப்பதற்காகப் பயன்பட்டது. அவ்வாறே, வீதி சமிக்ஞைகளும் அமைகின்றன. பிரதான வீதிகளில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களைக் கொண்ட சமிக்ஞை விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட தொடர்பாடல் வரலாறு

(12, 13 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி)

## குறியீடுகளைப் பயன்படுத்தல்

மக்கள் நடமாடும் இடங்களில் அறிவித்தல்களைச் செய்வதற்காக இன்றும்கூட குறியீடுகள்



பயன்படுத்தப்படுகின்றன. உலகம் முழுவதும் விமான நிலையங்கள், புகையிரத நிலையங்கள், வீதிகளில் அறிவிப்புக்களைச் செய்வதற்காக இத்தகைய பொதுக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் குறியீடுகள் மானிட நாகரிகத்தின் எந்தவொரு சமூகத்தினாலும் எந்தவொரு காலத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றன. அவ்வாறே, அவை மொழி வேறுபாடின்றி எவராலும் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றன.




## கணினிக்குள் அம்புக்குறி

ஆதிவாசிகள் இலக்கைக் குறிப்பதற்காகப் பயன்படுத்திய குறியீடு அம்புக்குறியாகும். இன்றும்கூட



குறிப்பிட்ட எல்லையை அல்லது இலக்கை சுட்டிக் காட்டுவதற்கு இந்தக் குறியீடு பயன்படுத்தப்படுகின்றது. அந்தவகையில், கணினியில் அம்புக்குறியும் (Curser) அந்த நோக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இது மனிதனின் மாற்றமுறாத தொடர்பாடல் முறையை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

## எழுத்துக்கலை வளர்ச்சி


ஆதி மனிதன் தகவல்களை இடத்திற்கிடம் கொண்டுசெல்லப் பயன்படுத்திய இன்னுமொரு வழிமுறையே வாய்மூல தகவலாகும். ஆனால், இந்தத் தகவல் பரிமாற்றத்திலும் பிரச்சினைகள் காணப்பட்டன. தகவலைக் கொண்டுசெல்பவரின் நினைவாற்றலில்தான் தகவலின் பலம் தங்கியிருந்தது. தொலைவில் இருக்கும் ஒருவருக்கு இன்னொருவரூடாக ஒரு தகவலை வாய்மூலம் சொல்லி அனுப்பும்போது, அத்தகவல் சரியானதாக சென்றடையவில்லை. தகவலை எடுத்துச் செல்பவர் நீண்ட தூரம் செல்லும்போது அதனை மறந்துவிடும் நிலைமைகள் ஏற்பட்டன. அத்துடன், வாய் வழியாக தகவல் பரிமாறுவதில் உண்மையான தகவல் திரிபடைந்தும் குளறுபடியாகும் நிலையும் காணப்பட்டதால், மாற்று வழி தேவைப்பட்டது. எனவே, இவ்வாறான நிலைமைகள் எழுத்துக்கலையின் அறிமுகத்துடன் மாற்றமடையலாயிற்று.

எழுத்துக்கலையின் அறிமுகம் ஒரு தகவலை எதிர்கால சந்ததியினருக்கு பிழையின்றி, பாதுகாத்து வைப்பதை இலகுவாக்கியது. ஆரம்பகால எழுத்துக்கலை மிகவும் இலகுவானதாகவும் எழுத்தை ஒன்றுடன் ஒன்று பொருந்தி வாசிக்கும் வகையிலும் இருந்தது. இத்தகைய எழுத்துக்கலை 'உருவ எழுத்து' என்று அழைக்கப்பட்டது. இந்த உருவ எழுத்துக்கலையின் தோற்றம் ஓரளவுக்கு கருத்து வெளிப்பாட்டுக்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் பேருதவியாக அமைந்தது. இந்த முறை 'கருத்து ரேகை' என்றழைக்கப்பட்டது.

உ+ம்: சீனர்கள் 'மனைவி' என்பதைக் குறிப்பதற்கு கூட்டுமாரைக் கையில் எடுத்த பெண்ணின் உருவத்தை வரைந்தனர். அவ்வாறே, அழுவதைக் குறிக்க கண்ணில் இருந்து கண்ணீர் வடியும் உருவத்தை வரைந்தனர்.

பிற்காலத்தில் இந்த உருவ எழுத்து முறை கருத்து ரேகையாக மாறியது. இன்றைய எழுத்துக்கலையானது இந்த கருத்து ரேகை (கோடு) முறையில் இருந்தே தோன்றியிருக்கின்றது.

எழுத்துக்கலையின் வளர்ச்சியுடன் தகவல்களைப் பதிந்துகொள்வதற்கான பொருட்களைத் தேடுவதில் மனிதன் ஈடுபட்டான். பண்டைய காலத்தில் இதற்காக தட்டையான கல், மரத்தின் பட்டை, மிருகத்தோல், எலும்புகள் என்பன பயன்படுத்தப்பட்டன. பெபிலோனியர்கள் மண் மேட்டிலும் தட்டையான கற்களிலும் எழுதினர். எமது நாட்டில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். எகிப்தியர்கள் பெபிரஸ் இலைகளை எழுதுவதற்காகப் பயன்படுத்தினர். காகிதத்திற்கு ஆங்கிலத்தில் 'பேப்பர்' (Paper) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் சொல் 'பெபிரஸ்' என்ற இலையின் பெயரில் இருந்து





வந்ததாகும். அதேபோன்று பண்டைய சீனர்கள் எழுதுவதற்காக நெய்யப்பட்ட துணியைப் பயன்படுத்தினர். செம்மறியாடு மற்றும் ஆட்டின் தோலை அவித்து-பதப்படுத்தி எழுதுவதை கிரேக்கர்கள் வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். இது 'பாச்மன்ட்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

அத்துடன், இன்றளவில் பாவனையில் உள்ள காகித உருவாக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் சீனர்களாவர். எனினும், தகவலைப் பதிந்துகொள்வதற்கான வழிமுறை அன்றைய காலத்தில் கண்டறியப்பட்டாலும், தகவலை விரைவாக அனுப்புவதற்கான வசதிகள் அக்காலத்தில் இருக்கவில்லை. மரபு ரீதியான வழிகள் மூலம் மட்டுமே எழுதப்பட்ட தகவல்கள் இடத்திற்கிடம் கொண்டு செல்லப்பட்டன. அது தூதுவர் ஒருவர் மூலம் கால்நடையாகவாகும். ஆனால், இந்த முறையில் தகவல் அனுப்பப்படும் போது அதற்கு நீண்ட நாட்கள் சென்றதோடு, தாமதத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

ரோமானியர்கள் ஒரு முனையில் இருந்து இன்னொரு முனைக்கு விரைவாக தகவலை அனுப்ப முன்னேற்றகரமான தெருக்களை அமைத்தனர். அவசரமாக குதிரையை ஓட்டிச் செல்லக்கூடியதாக அந்த தெருக்கள் இருந்தன. ஆயினும், இந்த முறையும் நாட்டுக்கு நாடு தகவல் விரைவாக அனுப்புவதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. இத்தகவல் பரிமாற்றமும் பல பிரச்சினைகள் நிறைந்ததாக இருந்ததால், மேலும் முன்னேற்றகரமான வழியைத் தேட வேண்டியிருந்தது.

**(மேலும் சில தகவல்கள் அடுத்த வாரம்)**

**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தை சேமிப்போம் போட்டி வெற்றியாளர்கள்...!

மின்வலு சக்தி அமைச்சின் இலங்கை நிலைபெறுதகுவலு அதிகார சபையும் 'விஜய்' பத்திரிகையும் இணைந்து கடந்த வருடம் நடத்திய 'மின்சாரத்தை சேமிப்போம்' போட்டியில் வெற்றி பெற்றுப் பணப்பரிசில்களை பெறுகின்ற 15 பேரின் பெயர் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

இதில் முதலாவது இடத்தைப் பெறுகின்றவர்களுக்கு ரூபா 1,50,000 பணப்பரிசும், இரண்டாம் இடத்தைப் பெறுகின்றவருக்கு ரூபா 1,00,000 பணப்பரிசும், மூன்றாம் இடத்தைப் பெறுகின்றவருக்கு ரூ 50,000 பரிசும் வழங்கப்படுவதுடன், மிகுதி 12 பேருக்கு தலா ரூபா 10,000 வீதம் வழங்கப்படும்.




**வெற்றியாளர்களின் விபரம் வருமாறு;**

**முதலாவது இடம்:**
ஜே.கே.சாமனி, கம்பஹா.

**இரண்டாவது இடம்:**
ஹஸித் சடரூபன், தொடன்துவ.

**மூன்றாம் இடம்:**
விமல், பாதுக்கை.

**ஏனைய 12 வெற்றியாளர்கள்;**

துலாஞ்சலி, தெனியாய.
எம்.நஜா, கொழும்பு-12.
நிதுக், புத்தளம்.
தினேஷ், கட்டுகஸ்தோட்டை.
ஷ◌ஃபிக்கா ரஹிம்தீன், மாத்தளை.
பூர்ணி, கம்பளை.
தினுஷி குமாரி, எஹெலியகொடை.
சந்திரபோஸ் பிரதீப்குமார், அம்பகமுவை.
கவிமினி, பத்தரமுல்லை.
சுரேக்கா, பஸ்ஸரை.
பிரதீப்குமார், கொட்டகலை.
கே.எல்.அஸ்னூன், வாழைச்சேனை.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி வரை 'மின்வலு' வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளதையிட்டு குறித்த வாரத்தில் 'விதுல்கா' என்ற பெயரில் மின்வலு கண்காட்சி நிகழ்வொன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன் இரண்டாவது நாளான ஓகஸ்ட் 4 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான சிறப்புத் தினமாக அமையப்பெற்றுள்ளமையால், அன்றைய தினம் 'மின்சாரத்தை சேமிப்போம்' போட்டி வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளது. வெற்றியாளர்கள் குறித்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை சீருடையுடன் வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3685
இ.துஷாந்தி,
தரம் - 8D,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.


அங்.இல: 3686
ஆர்.மதுஷியா,
தரம் - 3A,
புனித மரியாள் கல்.,
திருகோணமலை.


அங்.இல: 3687
ப.மகேந்திரநாதன்,
தரம் - 10A,
ஒட்டுசுட்டான் ம.வித்.,
ஒட்டுசுட்டான்.


அங்.இல: 3688
எம்.முர்ஸீத்,
தரம் - 11E,
அல்-ஹம்றா ம.வித்.,
ஒலுவில்.


அங்.இல: 3689
த.கபில்,
தரம் - 8B,
கலைமகள் வித்.,
முள்ளியவளை.


அங்.இல: 3690
இரா.கயந்தன்,
தரம் - 10C,
மகாஜனக் கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3691
லி.அனுஷன்,
தரம் - 8A,
கோவில்குஞ்சுக்குளம்
அ.த.க.பா., வவுனியா.


அங்.இல: 3692
செ.செல்வகரன்,
உயர் தரம்,
நெளுக்குளம் கலைமகள்
ம.வித்., வவுனியா.

## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவாகளுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிரா◌ஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron All Island Art Competition

| விண்ணப்பப்படிவம் | Application Form |
|---|---|
| போட்டியாளரின் பெயர்: Applicant's Name : | |
| முன்பள்ளி/பாடசாலை/ பல்கலைக்கழகம்/பகிரங்க : Pre School, Schools, University & Open Category : | |
| பிறந்த திகதி: Date of Birth : | |
| ஆண்/பெண் Sex : | ஆண் Female ☐ பெண் Male ☐ |
| வீட்டு முகவரி: Personal Address : | |
| தொலைபேசி இல: Telephone : | |
| வகுப்பு: Grade : | |
| சித்திரத்தின் தலைப்பு: Topic : | |
| பாவித்துள்ள வர்ணம்: Medium of Expression Oil, Water color, Poster CLR, Pastels : | |

.................... .................... ....................

போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/ Guardians Signature

பிரதான அனுசரணை: Acron COLSTAR | ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாங் கல்லையைச் சேர்ந்த பைஸர்-பஸ்ரினா தம்பதியரின் செல்வப் புதல்வன் பைஸான் அலி, 30.07.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: அகீலா அஷ்ரப்)

அண்மையில் உடத்தலவின்ன மடிகே English Academy பாலர் பாடசாலை மாணவர்கள் தமது ஆசிரியர்களுடன் தெஹிவளை விலங்கினக் காட்சிசாலைக்கு வருகை தந்திருந்ததை படத்தில் காணலாம்.

(தகவல்: உடத்தலவின்ன எஸ்.ஐ.எம்.நளீம்)




விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



கிண்ணியா-05 ஐச் சேர்ந்த முஹாஜிதீன் அன்சார்-ஜெசீமா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா றிப்னாஸ் பானு, 20.07.2010 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ந.மு.றுஸ்மில், கிண்ணியா-05)

கிண்ணியா-05 ஐச் சேர்ந்த முஹாஜிதீன் அன்சார்-ஜெசீமா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சஹ்னாஸ், 24.07.2010 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




## தாமரை மலர் ஒன்றை வரைதல்

★ 1 ஆவது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முதலில் தாமரை இதழ் ஒன்றை வரைவோம்.




★ பின்னர், 2 ஆவது பகுதியில் உள்ளவாறு அதன் இரு புறங்களிலும் ஒவ்வொரு இதழையும் வரையவும்.

★ 3 ஆவது படத்திற்கமைய, இரு பக்கங்களிலும் மேலும் பல இதழ்களை அடுத்தடுத்து வரையவும்.

★ இறுதியாக, 4 ஆவது படத்திற்கமைய, மலரின் கீழ்ப்பகுதி இதழ்களையும் வரைந்து, தாமரை மலரைப் பூரணப்படுத்துக.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



என்.நிரோஜன், தரம் - 4B, நோர்வூட் த.ம.வித்., நோர்வூட்.



சஞ்சீவன், யு.கே.ஜி, கிங்ஸ்டன் சர்வதேச கல்., வெள்ளவத்தை.



எஃப்.ஸதீகா, தரம் - 8, குமாரிமுல்ல மு.ம.வித்., பூகொடை.



எஃப்.ரஸ்னா, தரம் - 10A, குருகுத்தலை மு.ம.வித்., கடுகண்ணாவ.



எம்.ரஸீன் ரிம்சான், தரம் - 2B,



எம்.சுகானந்தன், தரம் - 9A, ஹைலன்ஸ் மத்.கல்., ஹட்டன்.



அஸ்ஃபா தஹானி, தரம் - 3F, முஸ்லிம் ம.கல்., கொழும்பு.



என்.எம்.ஆசிக், தரம் - 6C, ஜாமியுல் அஸ்ஹர் மத்.கல்., உடத்தலவின்ன மடிகே.



சி.உஷாந்தனி, தரம் - 8B, சீ.சீ.ம.வித்., பலாங்கொடை.



எஃப்.பர்ஹானா, தரம் - 6C, அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொடை.



ஜே.ரேவதி, தரம் - 11, தொலஸ்பாகே த.வித்., தொலஸ்பாகே.




கே.எம்.காலித், தரம் - 7T, இசிபதன கல்., கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் வான்கோழி கூறிய ரகசியம்



முள்ளெலி கூறியதைக் கேட்ட பறவைகள் ''இது நம் எல்லோரையும் அவமதித்து விட்டது'' என்றன. அப்போது தாரா கழுத்தை நீட்டி, ''அசடு யார் என்று பார்த்ததுமே நான் புரிந்து கொண்டேன்'' என்றது.

''முள்ளெலிகள் எங்காவது அசடுகளாக இருக்க முடியுமா'' என்று நொடித்தது முள்ளெலி.

அப்போது சேவல், ''திருவாளர்களே, எதற்காக நாம் இதோடு வீணே பேசிக் கொண்டிருக்கிறோம்? இதற்கு ஒன்றும் விளங்கப் போவ தில்லை... நாம் நேரத்தை வீணாக்குவதாகவே எனக்குத் தோன்றுகிறது.ஆமாம்.... ஒன்று செய்தால் என்ன? திருவாளர் தாரா, நீங்கள் இதனுடைய கட்டை மயிர்களை உங்கள் வலுவான அலகால் ஒரு பக்கம் பிடித்துக் கொள் ளுங்கள். ஆண் வான்கோழியும் நானும் இதன் கட்டை மயிர்களை மறுபக்கம் பிடித்துக்கொள் கிறோம். அப்போது புத்திசாலி யார் என்பது தெரிந்துவிடும் என்றது சேவல்.




ஆண் வான் கோழி சிறிது நேரம் பேசாமல் இருந்தது. முள்ளெலிக்கும் அதிர்ச்சி உண்டாயிற்று. என்ன பதில் சொல்வது என்று அதற்குத் தெரியவில்லை. அப்போது ஆண் வான்கோழிக்கு கடுங் கோபம் மூண்டது. அதனால், அங்கே கொஞ்சம் கலவரம் ஏற்பட்டது. இந்த மரியாதை கெட்ட பிரணியின் மேல் பாய்ந்து இதைச் சின்னச் சின்னத் துண்டுகளாகப் பிய்த் துப் போட்டு விடவேண்டும். எல்லாப் பறவைகளும் இதைப் பார்க்க வேண்டும். ஆண் வான்கோழி எந்த மாதிரியான ஆழ்ந்த போக்கும் கண்டிப்பும் உள்ள பறவை என்பதை இவை தெரிந்து கொள்ள வேண்டும் என்று அதற்கு விருப்பம் உண்டாயிற்று. அது முள்ளெலியின் பக்கம் சில அடிகள்கூட எடுத்து வைத்து, பயங்கரமாக உடம்பை உப்பிக் கொண்டு முள் எலியின் மீது பாயப்போனபோது, எல்லாப் பறவைகளும் கூச்சல் போட்டன. எனினும், சிறிது தயங்கிய ஆண் வான்கோழி அப்படியே நின்று விட்டது. ஆனால், விவகாரம் எதில் போய் முடியும் என்று பார்ப்பதற்காகப் பொறுமையாகக் காத்திருந்தது.

முள்ளெலியின் கட்டை மயிர்களைப் பிடித்து வெவ்வேறு பக்கங்களில் இழுக்கும்படிச் சேவல் யோசனை சொன்னதும் ஆண் வான்கோழி அந்த யோசனையை முற்றாக நிராகரித்து விட்டது.

எல்லாப் பறவைகளும் முள்ளெலி யைச் சூழ்ந்து கொண்டன. ஆண் வான்கோழி முள்ளெலியைச் சுற்றி வந்து இருமித் தொண்டையைச் சரிப் படுத்திக்கொண்டு கூறிற்று; ''கேளுங் கள், திருவாளர் முள்ளெலியாரே.... நடந்ததை உரிய முறையில் தெளிவுபடுத்திக் கொள் வோம். இவ்வாறான தகராறுகளை நான் பொதுவாகவே விரும்புவதில்லை''

அது கூறியதை பெரு மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்தது பெண் வான்கோழி, ''கடவுளே! இவர்தான் எப்படிப்பட்ட புத்திசாலி'' என்று எண்ணிக்கொண்டது.

''நல்ல மரியாதை விதிகளுக்குப் பழகிய ஒழுங்கான பறவைகளின் நடுவே நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை முதலில் கவனத்தில் கொள்ளுங்கள். இது சாதாரண விஷயம் அல்ல.... எங்கள் முகப்புக்கு வருவதைப் பெரு மையாகப் பலர் நினைக்கிறார்கள். ஆனால், வெகு சிலருக்கே இது வாய்க் கிறது'' என்று பேச்சைத் தொடர்ந்தது ஆண் வான்கோழி.

ஆண் வான்கோழி பேச்சை நிறுத்தி, அதன் மதிப்பை உயர்த்துவதற்காகக் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து விட்டு, பின்பு மேலே சொல்லிற்று; ''ஆம் தற்போது மிக முக்கியமான விஷயத்துக்கு வருவோம். முள்ளெலி களைப் பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று நீங்கள் நினைத்தீர் களா? உங்களை நாய்க்குடை என்று குறிப்பிட்டவர் தாரா. அவர் விளை யாட்டுக்குத்தான் அப்படிச் சொன்னார் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை''

''முழுக்க முழுக்கச் சரியான பேச்சு, வான்கோழியாரே'' என்று எல்லாப் பறவைகளும் ஒன்றாகப் பெருங்கூச்சல் போடவே, முள்ளெலி தன் கறுப்பு முகத்தை மறைத்துக்கொண்டது.

அப்போது ஆண்கோழி கண்ணைச் சிமிட்டி, ''ஒன்று சொல்கிறேன். ஒப்புக்கொள்ளுங்கள். திருவாளர் முள்ளெலியாரே கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னை... புத்தி இல்லாத பறவை என்று சொன்னீர்களே, நினை விருக்கிறதா? நீங்கள் விளையாட்டுக் குத்தானே சொன்னீர்கள்?'' என்று கேட்டது.

''சந்தேகம் இல்லை விளையாட்டுக் குத்தான் கூறினேன். எனக்கே உரிய குதூகல சுபாவத்தால் அவ்வாறு நடந்துவிட்டது''

ஆண் வான்கோழி முள்ளெலியின் காது வரை குனிந்து, ''போனால் போகிறது. ஒரு பெரிய ரகசியத்தை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆனால்.. ஒரு நிபந்தனை: யாரிட மும் சொல்லக்கூடாது. என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்ள எனக்குக் கூச்சமாகத்தான் இருக்கிறது. ஆனால், என்ன செய்வது நான் எல்லாவற் றையும் விடப் புத்திசாலியாக இருப்பதாக நினைப்பது? எனக்கு சில வேளைகளில் சங்கடமாகத்தான் இருக்கிறது. ஆனாலும், தயவு செய்து யாரிடமும் இதைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லி விடாதீர்கள்..!'' என்று ரகசியமாகக் கூறியது. (முற்றும்)

*(அடுத்த வாரம் கடைசி 'ஈ'யின் கதை...)*

# முதியவரின் வாக்கு

ஒருநாள் முதியவர் ஒருவர் ஒரு பெரிய மாளிகை போன்ற வீட்டுக்கு முன்னால் நின்று ''வீட்டில் யார்? கதவைத் திறவுங்கள். இரவு மட்டும் தங்கிச் செல்ல அனுமதியுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டார். குரல் கேட்டு வெளியில் வந்தாள் ஒரு பெண். முதியவரைப் பிச்சைக்கா ரன் என்று நினைத்து, ''அதெல்லாம் முடியாது. இடமில்லை போய்விடு'' என்று விரட்டினாள்.

முதியவர் அங்கிருந்து நடந்து, அடுத்ததாக இருந்த குடிசை வீட்டின் முன் நின்று கதவைத் தட்டி முன்போலவே தங்குவதற்கு இடம் கேட்டார். ஒரு பெண் வெளியில் வந்து, ''வாருங்கள் ஐயா. இங்கு நீங்கள் தங்கலாம். சிறிய இடம். அதனால் சிரமம் இருக்கும். பொறுத்துக்கொள்ள வேண்டும்'' என்று வரவேற்று உபசரித்தாள். முதியவர் மகிழ்ந்தார். உள்ளே போனார். சுற்றுமுற்றும் பார்த்தார். ஏழைக்குடும்பம்; இரண்டு மூன்று குழந்தைகள். நல்ல துணிமணிகள் இல்லை. நைந்து கிழிந்து போனவற்றையே அக்குழந்தைகள் அணிந்திருந்தனர்.பின்னர் அந்தப் பெண் வீட்டிலிருந்த சொற்ப உணவைக் கொண்டு வந்து வைத்து முதியவரை சாப்பிட அழைத்தாள்.ஆனால், அந்த முதியவர் ''என்னிடமும் கொஞ்சம் உணவு இருக்கிறது. அதனை எல்லோரும் சேர்ந்து உண்ணலாம்'' என்றவாறு தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து, எல்லோ ருக்கும் பகிர்ந்தளித்தார். குழந்தைகள் உண்டு மகிழ்ந்தன. மறுநாள் பொழுது விடிந்தது.தன் பயணத்தைத் தொடர்ந்த முதியவர் கிளம்பும்போது, ''அம்மணி! நீ காலையில் முதன் முதலில் செய்யத் தொடங்கும் வேலை மாலையில் இருட்டும் வரை தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவருக்கு விடை கொடுத்துவிட்டு உள்ளே சென்ற பெண் குழந்தைகளுக்குப் புதுச்சட்டைகள் தைக்க விரும் பினாள். அவளிடம் கொஞ்சம் புதுத்துணி இருந்தது. எல்லோருக்கும் போதுமா என்று தெரியவில்லை. எனவே, அளந்து பார்க்கத் தொடங்கினாள். அவ்வளவுதான்! அளக்க அளக்க புதுத்துணி வளர்ந்துகொண்டே போயிற்று. அவளும் சளைக்கவில்லை. மாலைக்குள் துணி மலைபோல் குவிந்துவிட்டது. தேவையான துணியை மட்டும் வைத்துக் கொண்டு மிகுதியை விற்று, பொருள் ஈட்டி அதைக் கொண்டு நிம்மதியாக குழந்தைகளை வளர்க்க நினைத் தாள். அப்பெண் துணியை அளக்கப் பயன்படுத்திய கோல், பக்கத்துவீட்டுப் பணக்காரியுடையது. மாலையில் அவளிடம் அதைக்கொண்டு போய் திரும்பக் கொடுத்தாள். கூடவே தன் வீட்டில் நடந்த அற்புதங்களைப் பெருமை யாகக் கூறினாள். அப்போதுதான், அந்த முதியவரைத் தான் விரட்டியடித்தது அந்தப் பணக்காரிக்கு நினைவுக்கு வந்தது. அவரைத் தன் வீட்டில் தங்க அனுமதிக்காமல் போனோமே என்று வருந்தினாள். இப்போதுதான் என்ன மோசம் போய்விட்டதென எண்ணிய அவள் தன் குதிரை வண்டிக்காரனை அழைத்தாள்.

''ஓடு ஓடு உடனே போய், அந்தக் கிழவர் எங்கேயாவது நடந்து போய்க்கொண்டிருப்பார். அவரை மறித்து வண்டி யில் ஏற்றி நம் வீட்டுக்கு உடனே அழைத்து வா'' என்று அவனை விரட்டியடித்தாள். அதற்குள் அக்கிழவர் நீண்ட தூரம் போய்விட்டார். அவரை அணுகிய வண்டிக்காரன், ''ஐயா, என் எஜமானி மிகவும் கோபக்காரி. நான் மட்டும் தனியாகத் திரும்பிச் சென்றால் என்னை வேலையை விட்டே நிறுத்தி விடுவாள். எனவே, தயவுசெய்து என்னு டன் வாருங்கள்'' என்று கெஞ்சினான். முதியவருக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. எனவே, அவர் அந்த வண்டியில் ஏறிக்கொண்டார். வீடு திரும்பியதும் பணக்காரி அவரை வணங்கி வரவேற்றாள். உள்ளே அழைத்துப் போனாள். சிறப்பான அறுசுவை உணவுகளை வழங்கினாள். மிருதுவான பஞ்சுமெத்தை ஒன்றை விரித் துப்போட்டு, ''முதியவரே, நிம்மதியாக இதில் படுத்து ஓய் வெடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாள்.

அதிகாலையில் துயிலெழுந்த முதியவர் தனது பயணத்துக்கு ஆயத்தமானார். அதற்குள் பணக்காரிக்கு அவசரம். ''சொல்லுங்கள் முதியவரே! இன்று நான் என்ன செய்யவேண்டும்?'' எனக் கேட்டாள். அதற்கு அந்த முதி யவர், முதல் நாள் அந்தப் பெண்ணி டம் கூறியது போலவே, ''அம்மணி! நீ காலையில் முதன்முதலில் செய்யத் தொடங்கும் செயல், நிற்காமல் மாலையில் இருட்டும் வரை தொடர்ந்து கொண்டே இருக் கும்'' என்றார். அவ்வளவுதான்! அடுத்தகணம், அந்தப் பணக்காரி முதியவருக்கு விடை கொடுப்பதைக் கூட மறந்துவிட்டாள். வீட்டுக்குள் ஓடினாள். புதுத்துணி ஒன்றை அளப்பதற்கு அளவுகோலை எடுத்துக்கொண் டாள். புதிய லினன் துணி அடுத்த அறையில் இருந்தது. அதைக்கொண்டு வர ஓடலானாள். அந்த நேரம் பார்த்து அவள் கால்களில் ஒரு கோழி சிக்கிக்கொண்டது.இதனால், அவள் தடுமாறினாள்.. துணியை அளக்க வேண்டியதை மறந்தாள். சினத்துடன் அக்கோழியை அடிக்க அளவுகோலை ஓங்கிக்கொண்டு ஓடினாள். அவள் செய்த அந்த முதல் செயல், அவளைத் தொற்றிக்கொண்டு விட்டது. பாவம்! மாலை வரையில் கன்னாபின்னா என்று திட்டிக்கொண்டே, அளவுகோலை ஓங்கியவாறு கோழியைத் துரத்தினாள். கீழே விழுந்து, எழுந்து, மீண்டும் விழுந்து, மீண்டும் எழுந்து ஓடிக்கொண்டே இருந்தாள். அந்தப் பேராசை பிடித்த பணக்காரிக்கு இப்பொழுது தன் தவறு புரிந்தது. அதிகமாக ஆசைப்படாமல் இனிமேல் பிறருக்கு உதவி செய்து வாழ்வதே நன்மையானது என தனக்குள் எண்ணிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இன்றைய பாடத்தில் நாம் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

නංගි: අක්කේ, අද සීතා අක්කාගේ උපන්දිනයට අපි කීයටද යන්නේ?
அக்கே, அத சீதா அக்காகே உபன்தினயட அபி கீயடத யன்னே?
தங்கை: அக்கா, இன்று சீதா அக்காவுடைய பிறந்ததின நிகழ்வுக்கு நாங்கள் எத்தனை மணிக்குப் போவது?

අක්කා: අපි දහයට විතර ගෙදරින් යමු.
அபி தஹயட விதர கெதரின் யமு.
அக்கா: நாங்கள் பத்து மணி அளவில் வீட்டிலிருந்து புறப்படுவோம்.



නංගි: ඒ වෙලාවට ගියාම ඇතිද?
ஏ வெலாவட கியாம எதித?
தங்கை: அந்த நேரத்திற்குப் புறப்பட்டால் போதுமா?

අක්කා: ඇති නංගි. සීතාගේ ගේ ළඟනේ තියෙන්නේ.
எதி நங்கி. சீதாகே கே லங்கனே தியென்னே.
அக்கா: போதும் தங்கச்சி. சீதாவுடைய வீடு அருகில்தானே இருக்கின்றது.

නංගි: අක්කේ මම මොකක්ද අඳින ගවුම?
அக்கே மம மொகக்த அந்தின கவும?
தங்கச்சி: அக்கா நான் எந்த சட்டையை உடுத்துவது?

අක්කා: ඔයාගේ උපන්දිනයට මැහුව කහ පාට ගවුම හොඳයි.
ஒயாகே உபன்தினயட மெஹுவ கஹ பா(ட்)ட கவும ஹொந்தய்.
அக்கா: உன்னுடைய பிறந்ததினத்திற்கு தைத்த மஞ்சள் நிற சட்டை நல்லது.

නංගි: ඒක හොඳද අක්කේ...?
ஏக ஹொந்தத அக்கே?
தங்கை: அது நல்லதா அக்கா?

අක්කා: ඒක හොඳයි නංගි. ඒ ගවුම ලස්සනයි.
ஏக ஹொந்தய் நங்கி. ஏ கவும லஸ்ஸனய்.
அக்கா அது நல்லது தங்கச்சி. அந்த சட்டை அழகானது.

නංගි: එතකොට අක්කා මොනවද අඳින්නේ?
எதகொட அக்கா மொனவத அந்தின்னே?
தங்கை: அப்படியென்றால் அக்கா எதை உடுத்துவீர்கள்?

අක්කා: මම සාරියක් අඳිනවා. මගේ නිල් පාට සාරිය.
மம சாரியக் அந்தினவா. மகே நில் பா(ட்)ட சாரிய.
அக்கா: நான் சாரி உடுப்பேன். என்னுடைய நீல நிற சாரி.



නංගි: ආ... ඒ සාරිය ලස්සනයි අක්කේ.
ஆ... ஏ சாரிய லஸ்ஸனய் அக்கே.
தங்கை: ஆ.... அந்த சாரி அழகானது அக்கா.

අක්කා: නංගි, දහය වෙනකොට ලැහැස්ති වෙන්න.
நங்கி, தஹய வெனகொட லெஹெஸ்தி வென்ன.
அக்கா: தங்கச்சி, பத்து மணிக்கு ஆயத்தமாகுங்கள்.

නංගි: හොඳයි අක්කේ.
ஹொந்தய் அக்கே.
தங்கை: நல்லது அக்கா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* சீதா அக்காவுடைய பிறந்ததின நிகழ்வுக்கு எத்தனை மணிக்குப் போவது?
සීතා අක්කාගේ උපන්දිනයට කීයටද යන්නේ?

i. உன்னுடைய பிறந்ததினத்திற்கு தைத்த மஞ்சள் நிற சட்டை.
..............................................................

ii. என்னுடைய நீல நிற சாரி.
..............................................................

iii. தங்கச்சி, பத்து மணிக்கு ஆயத்தமாகுங்கள்.
..............................................................






**Have** மற்றும் **Has** முதலான துணை வினைச் சொற்களை (Auxiliary Verbs) ஒரு வாக்கியத்தில் தனியொரு வினைச்சொல்லாக, ஏனைய சாதாரண வினைச் சொற்களைப் (Ordinary Verbs) போன்று கையாண்டு அமைக்கப்படும் வாக்கி யங்களில், **Have** என்பதற்கு தனியான ஓர் அர்த்தத்தைப் பெறமுடிகின்றது என முன்னர் கற்றோம் அல்லவா? அவற்றை மீண்டும் இங்கே அவதானித்துக் கொண்டு, அடுத்த பாடத்துக்குச் செல்லலாம்.

(அ) I have a purse.
நான் காசுப்பை ஒன்று வைத்திருக்கின்றேன்.
(என்னிடம் காசுப்பை ஒன்று உண்டு)

(ஆ) He has a hand-phone.
அவன் கைத்தொலைபேசி ஒன்று வைத்திருக்கின்றான்.
(அவனிடம் கைத்தொலைபேசி ஒன்று உண்டு)

(அ) I have.
✱ நான் வைத்திருக்கின்றேன்.
✱ (என்னிடம் உண்டு)

(ஆ) He has.
✱ அவன் வைத்திருக்கின்றான்.
✱ (அவனிடம் உண்டு)

**குறிப்பு:** மேற்படி, வாக்கியங்களில் Have மற்றும் Has எனும் வினைச்சொற் களுக்கு தனித்தனியான அர்த்தங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேற்படி வாக்கி யங்களை, நிகழ்கால தனி வாக்கியங்கள் (Present Simple Tense) எனக் கூறலாம்.

✱ ஆனால், **Have to** மற்றும் **Has to** முதலான வினைச்சொற்களை, மூல வினைச்சொற்களுடன் (Stem Verbs) கையாண்டு அமைக்கப்படும் வாக்கி யங்கள், வேறு வகையான வாக்கியங்கள் ஆகும். இவை, கடமைப்பாடுகளை/ தேவைப்பாடுகளைத் தெரிவிக்கும் வாக்கியங்களாக அமைகின்றன என்பதை நாம் அறிவோம் அல்லவா? அவற்றையும் மீண்டும் அவதானித்துக்கொண்டு ஏனைய பாடத்துக்குச் செல்வோம்.

(அ) I have to look after my parents.
நான் எனது பெற்றோரைக் கவனிக்க வேண்டியுள்ளது.

(ஆ) He has to partipate in that function.
அவன் அந்த வைபவத்தில் பங்குபற்ற வேண்டியுள்ளது.

✱ இனி புதிய பாடத்திற்குள் நுழைவோம். அதாவது, Have மற்றும் Has முதலான நிகழ்கால துணை வினைச்சொற்களை (Present Tense Auxiliary Verbs) இறந்த கால எச்சவினையுடன் (Past Participle) கையாண்டு அமைக்கப் படும் வாக்கியங்கள் பற்றிப் பயில்வோம். இவை நிகழ்கால வினைமுற்று வாக்கியங்கள் (Present Perfect Tense) எனப்படுகின்றன. இவற்றை உதாரணங்கள் மூலம் இங்கே பயில்வோம்.

(அ) I have taken my parcel.
நான் எனது பொதியை எடுத்து விட்டேன்.

(ஆ) He has given his book.
அவன் தனது புத்தகத்தைக் கொடுத்து விட்டான்.

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள '**taken**' மற்றும் '**given**' என்பன 'இறந்தகால வினை எச்சங்கள்' (Past Participles) ஆகும்.

✱ மேலும், **Have** எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லுடன், **taken** எனும் இறந்தகால எச்சவினை கூட்டுச்சேர்ந்து உருவாகியுள்ள **have taken** எனும் வினைச்சொற்களை, கூட்டு வினைச்சொல் (Compound Verb) என்றே கருத வேண்டும் என்பது ஆங்கில மொழி இலக்கண மரபாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் **have** என்பதற்கும் **taken** என்பதற்கும் தனித்தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை. எனவேதான், இவை இரண்டும் ஒரு கூட்டு வினைச்சொல்லாகக் கருதப்படுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

# க.பொ.த (உ/தர) பொது வினாத்தாள்

வழங்குபவர்: உடுவை பரந்தாமன்



1. **சமல் ராஜபக்ஷ இலங்கை நாடாளு மன்றத்தில் 2010 இல் ஏகமனதாக சபாநாயகராக தெரிவானார். அவர் பற்றிய கூற்றுகளில் உண்மைக்குப் புறம்பானது எது?**
   - i. 1989 முதல் நாடாளுமன்ற அங்கத்தவராக இருந்து வருகிறார்.
   - ii. இவர் இதற்கு முன்னரும் சபாநாயகராகப் பதவி வகித்துள்ளார்.
   - iii. இவர் அமைச்சுப் பதவியை வகித்துள்ளார்.
   - iv. இவர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவானவர்.
   - v. இவர் ஜனாதிபதி குடும்பத்தைச் சேர்ந்தவர்.



2. **அண்மையில் பொலிஸ் கல்வியல் கல்லூரி (Academy) ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அக்கல்லூரி அமைந்துள்ள இடம்?**
   - i. கொழும்பு-மலேவீதி
   - ii. நீர்கொழும்பு-கந்தானை
   - iii. கண்டி-பேராதனை
   - iv. மட்டக்களப்பு-வந்தாரமூலை
   - v. யாழ்ப்பாணம்-பலாலி

3. **இருபதற்கு-20 IPL (இந்தியன் பிரிமியர் லீக்) கிரிக்கெட் போட்டிகள் 2010 ஏப்ரல் 25 இல் முடிவுற்றது. இது சம்பந்தமாக பின்வரும் கூற்றுகளில் உண்மைக்குப் புறம்பானது எது?**
   - i. 2010 நடைபெற்ற போட்டி IPL மூன்றாவது போட்டியாகும்.
   - ii. இப்போட்டியில் 8 அணிகள் கலந்து கொண்டன.
   - iii. இத்தொடரில் சச்சின் டென்டுல்கர் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.
   - iv. மகேந்திரசிங் டோனி தலைமையிலான சென்னை சூப்பர்கிங்ஸ் அணி 22 ஓட்டங்களால் மும்பாய் இந்தியன்ஸ் அணியை தோற்கடித்தது.
   - v. அடுத்த IPL போட்டிகள் இலங்கையில் நடைபெறும்.



4. **2010 மார்ச்சில் ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்தமையால் உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் கூற்றுகளில் பிழையானது எது?**
   - i. ஐஸ்லாந்தில் 35 க்கு மேற்பட்ட எரிமலைகள் காணப்படுகின்றன.
   - ii. 2010 மார்ச்சில் வெடித்த எரிமலை இஜா ஜால ஒகுர் (Eyjar Jala Okur) என்பதாகும்.
   - iii. ஐரோப்பிய வான்வெளியில் கரும்புகையும் சாம்பலும் பரவியமையால் விமானப் போக்குவரத்துத் தடைப்பட்டது.
   - iv. ஐரோப்பிய ஆசிய வான்வெளியில் 'எட்னா' எரிமலை வெடித்தமையால் வான்வெளி புகைமண்டலமானது.
   - v. இஜா ஜால ஒகுர் எரிமலை இதற்கு முன்னர் 1821-1823 ஆண்டுகளில் வெடித்தது.



5. **DNA மரபணு சம்பந்தமாக பின்வரும் கூற்றுகளில் பொருத்தமற்றது எது?**
   - i. நோய்களைக் கண்டுபிடிக்க மரபணுவியல் விஞ்ஞானம் பயன்படுத்தப்படுகின்றது.
   - ii. ஒருவரின் சரியான அடையாளத்தை அல்லது பரம்பரையைக் கண்டுபிடிக்க முடியும்.
   - iii. சைமன் கம்பெல் விஞ்ஞானியே DNA ஐ கண்டுபிடித்தார்.
   - iv. 'Baby 81' என்ற சுனாமிக் குழந்தையின் சரியான பெற்றோரை இம்முறை மூலம் கண்டறியப்பட்டது.
   - v. DNA பரிசோதனை மூலம் ஒரு குழந்தையின் தந்தையை 99.9% சரியாக கண்டறிய முடியும்.

6. **லுசி ஜெய் பிரவுண் என்ற பெயர் பின்வரும் எக்காரணத்தால் புகழ் பெற்றது.**
   - i. சர்வதேச கார் ஓட்டப்பந்தயங்களில் லுசி ஜெய் பிரவுன் வெற்றி பெற்றமையால்
   - ii. 1978-07-28 ஐக்கிய இராச்சியத்தில் பிறந்த முதல் டெஸ்ட் டியூப் குழந்தைக்கு வைக்கப்பட்ட பெயராகும்.
   - iii. இன்று உலகில் டெஸ்ட் டியூப் குழந்தைகள் ஆயிரக்கணக்கில் உள்ளனர்.
   - iv. 1988 சிங்கப்பூரில் கருக்கட்டப்பட்டு ஜயவர்தனபுர வைத்தியசாலையில் முதல் டெஸ்ட் டியூப் குழந்தை இலங்கையில் பிறந்தது.
   - v. 1999 இல் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் முதல் டெஸ்ட் டியூப் குழந்தை பிறந்தது.



7. **சிங்கள சினிமாப்படத் தயாரிப்பில் உலகப் புகழ்பெற்ற தயாரிப்பாளர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் உண்மைக்குப் புறம்பானது எது?**
   - i. இவர் தயாரித்த 'கம்பெரலிய நிதானய' உட்பட பல சினிமாப் படங்கள் உலகப் புகழ்பெற்றவையாகும்.
   - ii. இவர் 2010 ஏப்ரலில் தனது 91ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.
   - iii. இவருக்கு ஒஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.
   - iv. இந்தியா இவருக்கு தங்க மயில் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.
   - v. இந்தியாவில் புகழ் பெற்ற இயக்குனர் சத்திய ஜித் ராய், ஜப்பானிய இயக்குனர் குரோசோவாஅவர்களுக்கும் இந்தியா கௌரவ விருது வழங்கியது.


8. **இலங்கையில் மிகவும் நீண்ட பாலம் கிண்ணியா வெள்ளை மணல் பாலமாகும். இது 2009 ஒக்டோபரில் பொது மக்கள் உடமையாக்கப் பட்டது. இப்பாலம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் பொருத்தமற்றது எது?**
   - i. இதற்கு முன்னர் 18 முறை அடிக்கல் நாட்டப்பட்டு நிறைவேறாமல் கைவிடப்பட்டிருந்தது.
   - ii. மகிந்த சிந்தனையின் கிழக்கு உதயம் வந்த பின்னர்தான் பாலம் நிர்மாணித்து முடிக்கப்பட்டது.
   - iii. இப்பாலத்தை நிர்மாணிக்க 1100 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
   - iv. இப்பாலம் உலக வங்கியினதும் ஐக்கிய அமெரிக்காவினதும் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது.
   - v. இப்பாலம் சவுதி அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

09. **ஆர்தர் சி கிளார்க் பிரபல விஞ்ஞான புனை கதை எழுத்தாளர். 1956 முதல் இலங்கையில் வாழ்ந்தவர். அவர் சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் உண்மைக்குப் புறம்பானது எது?**
   - i. இவர் செய்மதி தொடர்பாடலில் தந்தையாக கருதப்படுகின்றார்.
   - ii. இவர் தகவல் செய்மதித்துறையில் செய்த சேவைக்காக சர்வதேச தகவல் தொடர்பு பாதையை 'கிளார்க் சுற்றுப்பாதை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
   - iii. விஞ்ஞான யூனியன் கண்டுபிடித்த 4923 என்ற விண்பாதைக்கு இவரின் பெயரிடப்பட்டுள்ளது.
   - iv. இவர் எழுதிய நூல்கள் ஸ்பேஸ் ஓடிசி-2001, ஸ்பேஸ் ஓடிசி 2010, ஸ்பேஸ் ஓடிசி 2061 என்பன இவர் எழுதியதில் சிலவாகும்.
   - v. இவர் பௌதிகவியல் நோபெல் பரிசு பெற்றுள்ளார்.

**கடந்த 21.07.2010 இன் விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. i | 4. ii | 7. ii |
| 2. iv | 5. iii | 8. iii |
| 3. iv | 6. i | 9. v |

# மெக்ஸிக்கோவில் எண்ணெய் கசிவு தடுக்கப்பட்டுள்ளது



அமெரிக்காவை அண்டிய மெக்ஸிக்கோ கடல் பரப்பில் ஏற்பட்டிருந்த எண்ணெய் கசிவை தடுத்து விட்டதாக பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் எண்ணெய் அகழ்வை மேற்கொண்டிருந்த பரண் ஒன்று வெடித்து கடலில் மூழ்கியதுடன், எண்ணெய் குழாய் ஒன்றும் சேதமடைந்ததையடுத்தே, எண்ணெய் கசிவு ஏற்பட்டிருந்தது. இதனால், கடல் நீர் பெருமளவில் மாசடைந்தது.

பாதிக்கப்பட்ட எண்ணெய் குழாய் கடல் மட்டத்தில் இருந்து 1,600 மீற்றர் ஆழத்தில் காணப்பட்டமையாலேயே அதிலுள்ள வெடிப்பை அடைப்பதற்குப் பெரும் சிரமம் ஏற்பட்டது. எனினும், மனிதர்கள் நெருங்கச் சிரமமான இப்பகுதியில் ரொபோக்களைக் கொண்டே திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியாவில் ஒக:21 இல் தேர்தல்

**அவுஸ்திரேலியாவில் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடத்துவதற்கு அந்நாட்டின் புதிய பிரதமர் ஜூலியா கிலார்ட் தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**பொருளாதார கையாளுகை, காலநிலை, நாட்டின் எல்லைப் பாதுகாப்பு ஆகிய விடயங்களை பிரதானமானவையாகக் கொண்டு நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சிக்கும் எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சிக்குமிடையேதான் பிரதான போட்டி அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.**

**அவுஸ்திரேலியாவின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவரான ஜூலியா கிலார்ட் பிரதமராகப் பதவியேற்று சில வாரங்களே ஆகியுள்ள நிலையிலேயே தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ஆஸி.தேர்தலிலும் ஒக்டோபஸ் கணிப்பு



அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி வெற்றிபெறும் என்று 'ஒக்டோபஸ்' எனப்படும் ஒருவகை கடல்வாழ் உயிரினம் உணர்த்தி உள்ளது.

நடந்து முடிந்த உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின்போதும் ஜேர்மனியிலுள்ள இதே போன்ற மற்றுமொரு 'ஒக்டோபஸ்' யார் வெற்றி பெறுவார் என்று உணர்த்திய எதிர்வுகூறல்கள் சரியாக அமைந்ததை அறிவீர்கள்.

ஆனால், ஆஸி தேர்தல் குறித்து எதிர்வு கூறியுள்ள ஒக்டோபஸ் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் கடல் அறிவியல் கூடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதன் பெயர் 'கசன்ட்ரா' ஆகும்.

ஆளும் கட்சியின் தலைவி ஜூலியா கில்லார்ட்டின் புகைப்படத்தை ஒருபுறமும், எதிர்க்கட்சி வேட்பாளர் டோனி எப்போர்ட்டின் புகைப்படத்தை இன்னொரு புறமும் என நீர் தொட்டியொன்றில் வைக்கப்பட்டு அத்தொட்டியினுள் ஒக்டோபஸ் இறக்கப்பட்டது. அதன்போது ஒக்டோபஸ் நேரே ஜூலியா கில்லார்ட்டின் புகைப்படத்தையே பற்றிக் கொண்டது. எனவே, ஜூலியா கில்லார்ட் வெற்றி பெறுவார் என்றே ஒக்டோபஸ் மீது நம்பிக்கை கொண்டவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

**அற்லஸ் கேள்வி - 266**

**கேள்வி:** அவுஸ்திரேலியாவின் தேர்தல் கணிப்பை உணர்த்தியுள்ள ஒக்டோபஸ்ஸின் பெயர் என்ன?

சரியான விடை...............................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 266, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 264 இன் சரியான விடை: ஹஸான் ஷருக்**

**பரிசு பெறுவோர்**

ஆர்.மதுஷியா,
50/12 சோலையடி, 3 ஆம் கட்டை,
உப்புவெளி.

நா.சோபிகன்,
222, கண்டி வீதி, தேக்கவத்தை,
வவுனியா.

எஸ்.நவநீதா,
2 F/7, நவகம்புர 2, வெல்லம்பிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் களத்திலிருந்து ஓய்வு பெறுகின்ற முரளிதரனின் டெஸ்ட் சிறப்புக்கள்....

## முரளியின் விபரக்கொத்து



முழுப்பெயர் - முத்தையா முரளிதரன்
பிறப்பு - 1972 ஏப்ரல் 17 (கண்டியில்)
செல்லப் பெயர் - முரளி
மனைவியின் பெயர் - மதிமலர்
பிள்ளையின் பெயர் - நரேன் முரளிதரன்
துடுப்பாட்டம் - வலது கை ஆட்டம்
பந்து வீச்சு - வலது கை வீச்சு
முதலாவது டெஸ்ட்- 1992 ஓகஸ்ட்-28 (அவுஸ்திரேலியாவிற்கு எதிராக)
இறுதி டெஸ்ட் - 2010 ஜூலை 18 (இந்தியாவிற்கு எதிராக)
முதலாவது ஒருநாள் - 1993 ஓகஸ்ட் 12 (இந்தியாவிற்கு எதிராக)
வேறு குழுக்களில் - 1991 தொடக்கம் தமிழ் யூனியன் கழகம், 1999 மற்றும் 2007 லென்க்ஷயர், 2003 கென்ட், 2008 சென்னை சுப்பர் கிங்ஸ்.

| நாடு | போட்டி | இன்னிங்ஸ் | ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட் | சி.ப.வீ |
|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 13 | 21 | 685.3 | 2128 | 58 | 212/11 |
| பங்களாதேஷ் | 11 | 22 | 452 | 1190 | 89 | 82/12 |
| இங்கிலாந்து | 16 | 30 | 1102.1 | 2247 | 112 | 220/16 |
| இந்தியா | 21 | 30 | 1108.2 | 3234 | 97 | 110/11 |
| நியூஸிலாந்து | 14 | 25 | 753.2 | 1766 | 82 | 118/10 |
| பாகிஸ்தான் | 16 | 25 | 782.5 | 2037 | 80 | 148/10 |
| தெ.ஆபிரிக்கா | 15 | 27 | 984.4 | 2311 | 104 | 171/13 |
| மே.இ.தீவுகள் | 12 | 22 | 622.3 | 1609 | 82 | 170/11 |
| சிம்பாப்வே | 14 | 26 | 786.5 | 1467 | 87 | 115/13 |

குறிப்பு: சி.ப.வீ - சிறந்த பந்துவீச்சு

# உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைக்கும் வாய்ப்பு





சிங்கப்பூரில் அடுத்த வருடம் (2011) ஜூலை 3 ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக்கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கு இலங்கை உட்பட மூன்று நாடுகளுக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அதன்படி, போட்டியை நடத்துகின்ற சிங்கப்பூர் உட்பட மலேசியாவிற்கும் இந்த வாய்ப்பை வழங்குவதற்கு சர்வதேச வலைப்பந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கப் பெறுமா என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. 12 அணிகளுக்கு மாத்திரமே இந்த வாய்ப்பை வழங்கமுன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில் 21 ஆம் இடம் வரை இடம்பிடித்துள்ள அணிகளுக்கு வாய்ப்பை வழங்குவதற்கு பின்னர் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, தரப்படுத்தலில் 508 புள்ளிகளுடன் 14 ஆம் இடத்திலுள்ள இலங்கைக்கும் இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. முதலாவது இடத்தை பெற்றுள்ள அவுஸ்திரேலியா 3808 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி, தரப்படுத்தல் பட்டியலில் சிங்கப்பூர் 18 ஆம் இடத்திலும் மலேசியா 21 ஆம் இடத்திலும் உள்ளன.

இருப்பினும், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி இந்தியாவில் நடைபெற ஏற்படாகியுள்ள பொதுநலவாய (கொமன்வெல்த்) விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இலங்கை வலைப் பந்தாட்ட அணி இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தரப்பட்டியலில் 12 ஆம் இடம் வரை இடம்பிடித்துள்ள அணிகளுக்கு மாத்திரமே இதில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளமையால் இலங்கை இந்த வாய்ப்பினை இழந்துள்ளது.

## ஸாஹிராவின் ரக்பி போட்டிகள்

கொழும்பு ஸாஹிரா கல்லூரி ரக்பி அணியின் 85 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு, குறிப்பிட்ட ஏழு பாடசாலை ரக்பி அணிகளுக்கிடையே யான போட்டித் தொடரொன்று ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை றோயல் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாடசாலைகள் ரக்பி சங்கத்தினதும் இலங்கை ரக்பி சங்கத் தினதும் அனுசரணையின் கீழ் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இம்முறை நடைபெறுகின்ற இப் போட்டிகள் மூன்றாவது வருடமாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருட போட்டிகளி லும் கொழும்பு இஸிபத்தான கல்லூ ரியே கிண்ணத்தை வெற்றிகொண்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது.



# சாதனை வீரனின் மற்றுமொரு மைல்கல்..!

## 800 விக்கெட்கள்



இலங்கை அணி யின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தனது 800 ஆவது டெஸ்ட் விக்கெட்டைப் பெற்று உலகிலேயே 800 விக்கெட்களைப் பெற்ற முதலாவது பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றுவிட்டார். இலங்கை- இந்திய அணிகளுக்கிடையே காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே முரளி இந்த மைல்கல்லை அடைந்துள்ளார்.

குறிப்பிட்ட இந்த டெஸ்ட் போட்டியு டன் ஓய்வு பெறப்போவதாக முரளி அறிவித்திருந்த நிலையில் அதேபோட்டி யில் அவரால் இந்த மைல்கல்லை அடையமுடிந்தமை சிறப்பம்சமாகவே கருதப்படுகின்றது. போட்டிக்களத்தை விட, போட்டிக்களத்திற்கு வெளியே பலவிதமான சோதனைகளை, சவால்களை வெற்றிகரமாக முறியடித்தே இத்தகைய உச்சநிலையை முரளி அடைந்துள்ளார் என்றால் அதில் மிகையில்லை.

இத்தகைய சாதனையை முரளி நிகழ்த்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் இத்தனை இடையூறுகளும் அவருக்கு ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, இத்தகைய சோதனைகளை அவர் தாண்டியது மட்டுமன்றி, அந்த வெற்றி இலக்கையும் தொட்டுவிட்ட முரளி இரட்டை சாதனையாளன்தான். முரளிக்கு விஜய்யினதும் வாசகர்களினதும் வாழ்த்துக்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்திரனின் குளம்

ஒரு காட்டுப்பகுதியில் சந்திராவதி என்ற ஓர் அழகிய குளம் இருந்தது. அந்த குளத்திற்கு அருகிலுள்ள புதர்களில் முயல்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்த முயல்களும் காட்டில் வாழும் விலங்குகளும் அந்த குளத்தில் வந்து நீர் அருந்துவது வழக்கம். அக்காட்டின் ஒரு பகுதியில் நிறையக் காட்டு எருமைகளும் வாழ்ந்து வந்தன.

சில வாரங்களாக காட்டில் உள்ள குளங்களில் நீர் வற்றிப்போனது. நீர் இல்லாத நிலையில் காட்டு எருமைகள் மற்ற விலங்குகளைப் பின் தொடர்ந்து வந்து சந்திராவதி குளத்தில் நீர் அருந்தி நீராடியதோடு மட்டுமல்லாமல் குளத்து நீரை நாசமாக்கிவிட்டும் சென்றன. இதனால், மற்ற விலங்குகள் மிகுந்த கவலைப்பட்டன. காட்டு எருமைகளின் அட்டகாசத்தைப் போக்குவதற்கு முயல்கள் ஆலோசனை செய்தன.

ஒருநாள் முயல்கள் எல்லாம் ஒன்றிணைந்து எருமைகளை விரட்டியடிக்க ஒரு சிறந்த திட்டம் தீட்டின. அதன்படி, ஒரு முயல் எருமைகள் இருக்கும் இடத்துக்குச் சென்று "எருமைகளே நீங்கள் தினமும் வந்து நீராடி மாசுபடுத்தும் நீர் சந்திரனின் குளம் ஆகும். சந்திரபகவான் வாரத்திற்கு ஒருமுறை வந்து அந்த குளத்தில் இரவு வேளையில் நீராடுவார். கடந்த சில வாரங்களாக நீங்கள் வந்து அவர் நீராடும் நீரை மாசு படுத்தியதால் அவரால் ஒழுங்காக நீராட முடியவில்லை. இனிமேல் நீங்கள் அங்கு வரக்கூடாது என கூறியுள்ளார். வேண்டுமானால் இன்று இரவு வந்து நீங்களே அவரைப் பாருங்கள்" என்றது.

முயல் கூறியதை சற்றும் பொருட்படுத்தாத எருமைகள் இரவில் அக்குளத்தை நாடிச் சென்றன. அன்று பௌர்ணமி தினம் ஆகையால் முயல்களுக்கு எருமைகளை விரட்டுவது சுலபமாக இருந்தது. குளத்துக்கு வந்த எருமைகள் குளத்தில் தெரிந்த முழு சந்திரனின் விம்பத்தைப் பார்த்துப் பயந்தன.

ஒரு புதருக்குள் மறைந்திருந்த சில முயல்கள் சேர்ந்து "வாங்கடா வாங்க! உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் நான் நீராடும் நீரை மாசு படுத்தியிருப்பீர்கள்? நீங்கள் மாசு படுத்திய நீரில் நான் நீராட வேண்டுமா? இனிமேல் நீங்கள் இதில் நீராடினால் உங்களுக்கு கொம்புகள் இல்லாமலாக்கி விடுவேன்" என்று உரத்த குரலில் பேசின. பயந்து போன எருமைகள் அன்று ஓட்டம் பிடித்ததுதான். பின்பு அந்த குளப்பக்கம் வரவே இல்லை.

ரா.ஜோன் டில்ஹான், டி.எஸ்.சேனாநாயக்க கல்.,

## விடுகதைகள்

1. உயிர்வாழ உதவும் நண்பன்; உலகமெல்லாம் உலவுகிறான். அவன் யார்?
2. உலகம் சுற்றும் வாலிபன்; ஓய்வே அறியா வாலிபன். அவன் யார்?
3. வருவதும் போவதும் தெரியாது; வந்தால் தெரியும், போனால் புரியும். அது என்ன?
4. கண்ணிருக்கும் பார்வை இல்லை; தலையிருக்கும் உடலும் இல்லை. அது என்ன?
5. காலை நேரத்தில் கண்டு மகிழ்ந்தேன்; பகலில் பார்த்தேன் காணவில்லை. அது என்ன?
6. குடத்துக்குள் உப்புத் தண்ணீர் கொஞ்ச நாளில் நல்ல தண்ணீர். அது என்ன?

### விடைகள்

1. காற்று
2. சூரியன்
3. மின்சாரம்
4. தேங்காய்
5. பனித்துளி
6. இளநீர்

## கோபம் கூடாது



கோபம் கொடிய குணம். கோபத்தினால் உறவுகள் முறிகின்றன. சண்டைகள் தொடர்கின்றன.கொலைகள் நிகழ்கின்றன. எனவே, கோபம் கொள்வது கொடியது. கோபத்தைத் தவிர்க்க எளிய வழிகள் உள்ளன.

* எப்பொழுதும் மென்மையான வார்த்தைகளினால் பதில் அளித்தல்.
* எப்பொழுதும் எரிச்சலூட்டும் வார்த்தைகளைப்பேசாதிருத்தல்.
* உணர்வுகளை அதிகப்படியாக வெளிக்காட்டிக் கொள்ளாமை.
* முரட்டுத்தனமான செயல்கள் வார்த்தைகளைத் தவிர்த்தல்.

இப்படி இருந்தால் எவரும் கோபிக்க மாட்டார்கள். உங்களை கோபமூட்ட நினைத்து வந்தவராலும் உங்களைக் கோபமூட்ட முடியாது.

ஆர். அனுஷியா, மடுல்கலை.



## மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்
மனதைக் கவரும் மாம்பழம்
மாமா தந்த மாம்பழம்

அழகான மாம்பழம்
அருஞ்சுவை மாம்பழம்
மணம் வீசி மயக்குதே
மரத்தில் தொங்கி ஈர்க்குதே.

குண்டுக் குண்டு மாம்பழம்
தேன் போல இனிக்குதே
மாம்பழத்தைப் பறித்திடுவோம்
மகிழ்ச்சியுடன் உண்டிடுவோம்.

எஸ்.நிறோஜன், தரம் - 10A,
யா/வைத்தீஸ்வராக் கல்.,

## கல்வியின் மகத்துவம்






மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறிவாளிகள்தான். தம் அறிவுக்கு விருந்தளிக்கக்கூடிய கல்வியைப் பெறுவதில் அக்கறை அற்றவர்களே அறிவற்றவர்களாகக் காணப்படுகின்றனர். கல்வியானது ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். அதனை அவன் கண்ட இடத்திலும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதனாலேயே "கண்டது கற்கப் பண்டிதனாவான்" எனக் கூறப்படுகின்றது. ஆனால், அறிவில் குறைந்தவர்கள் அரும் செல்வமாகிய அழிவற்ற கல்விச் செல்வம் இருக்க, அழியக்கூடிய செல்வத்தை நாடுகின்றனர். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என கருத்தில் கொள்ளவேண்டும். கல்வியானது வெள்ளத்தால் அழியாது; வெந்தணலால் வேகாது; வேந்தராலும் கொள்ள முடியாது; கொடுத்தாலும் குறைவுறாது; கள்வர்களால் கவரப்பட முடியாதது.

நாம் சாதாரண பொருட்களை கொள்வனவு செய்யும்போதுகூட, அதிக காலம் தாக்குப் பிடிக்கக்கூடிய பொருட்களையே கொள்வனவு செய்கிறோம். ஆனால், நாம் அழியாக் கல்வியைப் பெறுவதில் தாமதம் கொள்கிறோமல்லவா? இங்கு நம்மை அறியாமை எனும் இருள் சூழ்ந்துள்ளது என்பது தெளிவாகின்றது. கல்வியானது பிறருக்கு எடுத்து சொல்லச் சொல்ல அளவில்லாமல் பெருகும். அறிவுடையோரும் அறிவற்றோரும் வாழும் சமூகத்தில் அறிவற்றவர்களின் அறிவுரை நன்றாக இருப்பினும், அதை அறிவுடையோர் ஏற்கமாட்டார்கள். கல்வி மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் அவசியமாகும்.

பர்வின் பாரிஸ்,
தரம் - 11,
கே/மாவ/கொடேகொட மு.வித்.,

## சூழல் மாசடைதலின் பாதிப்பு

நாம் வாழும் சூழல் சுத்தமாக இருந்தால் நாமும் சுகமாக வாழலாம். சூழல் எவ்வாறு மாசடைகிறது? நாம் தேங்காயைத் துருவுகிறோம். சிரட்டையைப் பக்கத்திலுள்ள குப்பைகளில் எறிகிறோம். மழை பெய்கிறது. சிரட்டையில் நீர் நிறைகிறது. குப்பை கூழங்கள் எல்லாம் அழுகி மணக்கின்றன. சிரட்டை நீரில் நுளம்பு முட்டையிடுகிறது. நுளம்புகள் பல்கிப் பெருகுகின்றன. இதனால், இரவில் நுளம்பின் தொல்லை அதிகரிக்கின்றது. இந்த நுளம்புகளின் அதிகரிப்பால் நோயாளர்களின் தொகையும் அதிகரிக்கின்றது.

இது மாத்திரமா? எமது வீட்டின் கழிவு நீர், குழிகளில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனாலும் தொற்று நோய்கள் பரவுகின்றன. விவசாயிகள் தமது பயிர்களுக்கு கிருமிநாசினிகளைத் தெளித்துவிட்டு வெற்றுப் போத்தல்களை நீரோடைகளில் வீசுவதாலும் நீர் மாசடைகிறது.

சுற்றாடலை சுத்தப்படுத்தி குப்பைகளைக் குழிகளில் போட்டுப் புதைத்தோ அல்லது எரித்தோ விடாத காரணத்தால் கிருமிகளும் அதனால் தொற்றுநோய்களும் தீவிரமாகப் பரவுகின்றன.

இவ்வாறாக நாம் சூழலை மாசடையச் செய்வதனால் ஏற்படும் தொல்லைகளை நாமே அனுபவிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறோம். எனவே, சூழலைச் சுத்தமாக வைத்திருப்போமாக.

ரஸ்ஹா ஸலாஹுத்தீன்,
தரம் - 7B, [illegible] மு.வித்.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.08.04 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 271
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அறிவுக்கு விருந்து - 268 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**போட்டி: 1**
சானு பிரவீண், 63, ஆரியபுர, பொகவந்தலாவ.

**போட்டி: 2**
ஜுமானா ஹஸீன்,
374 1/A, உடையார் வீதி, சாய்ந்தமருது-11.

**போட்டி: 3**
சலாஹ் அஹ்மட்,
82, குருநேகொட, கொடியாகும்புர.

**போட்டி: 4**
பர்ஸான் நைஸர், 120/3, பெடிக்வத்த, அம்பலாந்துவ.

**போட்டி: 5**
பி.ஹேமமாலினி, 6/1, வாரியபொல, மாத்தளை.


### பாராட்டுப் பெறுவோர்

- ஆர்.மதுஷியா, திருகோணமலை.
- எம்.ஏ.ஃபரீத், மாத்தறை.
- எஸ்.தமிழ்இன்பன், கோண்டாவில்.
- எஸ்.தினுஷ் ரேவிந்த், பண்டாரவளை.
- எஃப்.சஹ்னா, பதுளை.
- த.நோயல் அபிலாஷ், மட்டக்களப்பு.
- எம்.யூனுஸ், மாவனல்லை.
- தி.மதிசியா, புங்குடுதீவு.
- ப.சுரேந்தர், வவுனியா.
- என்.நதில் அஹ்மட், புத்தளம்.

## இலக்கங்களை முறையே இணைத்து, உருவைப் பூரணப்படுத்துக 1




## எத்தனை உள்ளன? 3




## அறிவுக்கு விருந்து - 268 விடைகள்

**போட்டி: 1**




**போட்டி: 2**




**போட்டி: 3**
corn, rake, squirrel, acorn, windy, pumpkin, apple, leaf

**போட்டி: 4**
1. குழல் 2. நிபந்தனை 3. பூஞ்சணம்

**போட்டி: 5**
உள், உள்ளகம், உளி, உளம், உறி, உள்ளம், உள, பள்ளம், பறி, பளபள, பள்ளி, பவளம், கள், களம், கள்ளம், கள்ளி, களி, கம்பளம், கவளம், வளி, வள்ளம், வளம், வளவள

## சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள வாக்கியத்தைப் பெறுக 4

1. ஆகும்/உலோகமாக இருந்தது/கி.பி 1886 வரை/அலுமினியம்/உலகின்/விலை உயர்ந்த/

.............................................................

.............................................................

## இணைக்க 5

| நாடு | தலைநகரம் |
|---|---|
| 1. கென்யா | 1. பேர்ன் |
| 2. சுவிற்சர்லாந்து | 2. நைரோபி |
| 3. மியன்மார் | 3. நய்ப்யிடோவ் |

## பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக 2



## விஜய் வாசகர் மடல்



'வளிமண்டலவியல் கண்காணிப்பு', 'நெல் பயிர்ச் செய்கை' ஆகியன பல பயன்மிக்க தகவல்களைத் தாங்கி வந்திருந்தன.

**-எஸ்.திலக்ஸன், தரம்-12, பேராதனை இ.கல்., கண்டி.**

தலைப்பை மட்டும் பார்த்து எதையும் முடிவு செய்யக் கூடாது. முழு விடயத்தையும் வாசிக்க வேண்டும் என்பதை 'பூமியை விழுங்கவுள்ள சூரியன்' என்ற ஆக்கம் நன்கு உணர்த்தியது. நான் தலைப்பைக் கண்டு பயந்துவிட்டேன். ஆனால், முழுமையாக வாசித்த பின்புதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். விஜய்க்கு நன்றிகள்.

**-எம்.அப்ராஸ், ஷரபிய்யா அ.கல்., மதவாக்குளம்.**

'ரோஜா', 'நெல் பயிர்ச்செய்கை', 'வளிமண்டலவியல் கண்காணிப்பு', 'சங்கிலி மன்னன் தொடர்' என்பன என்னைக் கவர்ந்தவை. விஜய்க்கு சிறுகதை அல்லது ஆக்கங்கள் அனுப்புவதற்கான முகவரியைப் பிரசுரிக்கவும்.

**-எம்.ஜில்சாத், எம்.எஸ்.ஏ. கல்லூரி, புத்தளம்.**




★ ***'விஜய்', த.பெ.எண்.2037, கொழும்பு என்ற முகவரிக்கு எந்தவொரு ஆக்கத்தையும் அனுப்பி வைக்கலாம். தரங்கண்டு அவை பிரசுரிக்கப்படும்.***

***(ஆ-ர்)***

விண்வெளித் தகவல்கள், விளையாட்டுச் செய்திகள், இராமாயணம் என்பன வெகு ஜோர்.

**-எம்.நுஹாஸ், தரம்-9D, பாபுல் ஹஸன் ம.கல்., தும்மலதெனிய.**

விஜய்யில் வரும் அனைத்து விடயங்களும் பயனுள்ளதாகவும் பாடசாலைக் கல்விக்கு கைகொடுப்பதாகவும் உள்ளன.

**-எஸ்.நரேன், ரணபிம ரோயல் கல்., கண்டி.**

'பாதையை மாற்றிய பயணம்', 'இளைஞனின் மதிநுட்பம்', 'அமைதியே இல்லாத குணம்' போன்ற சிறுகதைகளும் தொடர்கதையும் என்னைக் கவர்ந்தவை.

**-ஜெ.சௌமினி, உ/தரம், இராமநாதன் கல், யாழ்ப்பாணம்.**

'சட்டமீறல், மதுபோதை ஏற்படுத்தும் மரணங்கள்' எனும் ஆக்கம் போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் படிப்பினையைப் புகட்டுவதாகவும் அமைந்தது.

**-என்.விமலன், திருகோணமலை.**

விளையாட்டுப் பகுதியில் வெளியாகும் பிந்திய,முந்திய தகவல்கள் விளையாட்டுப் பிரியர்களுக்கு விருந்தளிப்பதாக உள்ளன.

**-சே.கவிமாலன், மகா ஊவா, வலப்பனை.**

'உலோகங்கள்', 'வளிமண்டலவியல் கண்காணிப்பு', 'திறமைமிகு கட்டடக்கலைஞன் கறையான்', 'விண்வெளித் தகவல்கள்' என்பன சிறப்பாக இருந்தன. அத்துடன், கல்வி முகாமைத்துவத்தின்கீழ் வெளியாகும் ஆலோசனைகள் மிகவும் பயனளிப்பதாக அமைகின்றன.

**-எஃப்.அஸ்மா, தரம்-9A, வெலிமட மு.ம.வித்., வெலிமட.**


**இந்த இதழில் (28.07.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.08.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 05

அரியாலையூர் சி.சிவதாசன்

## சதியாக மாறிய விதி






கொலைகாரனை கொடும் சிறையில் அடைக்குமாறு கூறிவிட்டு, அரண்மனையை நோக்கி நடந்தான் மன்னன். பரநிருபசிங்கனின் சூழ்ச்சியும் அடுத்தடுத்து இராசகுமாரர்கள் இறந்ததற்கும் வன்னியர் போட்ட சதித்திட்டமே காரணம் என எங்கும் பரவலாகப் பேசப்பட்டது. தாயினும் மேலான தாய்த்திருநாட்டை கீழ்மையான பதவி ஆசையால் வன்னியருக்கு விற்றுவிட்டானே பரநிருபசிங்கன். அந்நியர் போற்றும் எங்கள் அழகிய யாழ்ப்பாண நாட்டை காட்டிக்கொடுக்கும் கயவனாக பரநிருபசிங்கன் மாறியது எப்போது? வன்னியர் போடும் திட்டத்திற்கு உறுதுணையான அந்த வஞ்சகனை கொலை செய்யவேண்டும் என மக்கள் எங்கும் பேசிக் கொண்டனர். இது கேட்டு பரராசசேகர மன்னன் மிகுந்த கவலை அடைந்தான். புத்திரர்கள் இருவர் அநியாயமாக மரணமடைந்த கவலை ஒருபக்கம். யாழ்ப்பாண நாட்டைக் கைப்பற்ற நினைக்கும் எதிரிகள் கூட்டம் மறுபக்கம். மக்கள் வாய்க்கு வந்தபடி பரநிருபசிங்கனைப் பேசுவது இன்னொரு பக்கம். இதனால், மன்னன் அமைதியின்றி சஞ்சலம் அடைந்தான். மேலும் என்னென்ன நடக்குமோ? என்றெண்ணி துன்பம் மிகக் கொண்டான்.

சோதிடர்கள் அன்று சொன்ன வார்த்தைகளை நெஞ்சத்தே எண்ணி சிந்தித்தான். விதியை எவராலும் வெல்லமுடியாது என்று அவன் மனம் இப்போது எண்ணிக்கொண்டது. இருந்தாலும் நான் இராஜ நீதிப்படி நடந்துள்ளேன் என தனக்குள் சிந்திக்கலானான். இவ்வாறு மன்னன் வேதனைக் கடலில் சிக்கித் தவித்தபோது இறந்த அரசிளங்குமரன் பண்டாரத்தின் தகனக் கிரியைகளை மந்திரிப் பிரதானிகள் நிறைவேற்றினர். பரநிருபசிங்கனின் சூழ்ச்சி பற்றி அறிந்தபோதும்கூட அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டல் வேண்டும் என்ற முடிவிலேயே மன்னன் இருந்தான். வயோதிபம் அவனை ஓய்வெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. சூழவும் எதிரிகளைக்கொண்ட யாழ்ப்பாண அரசைக் காப்பாற்ற நல்ல தலைமை இருக்கவேண்டும் என்பதை மன்னன் அப்போது சிந்திக்கவில்லை. பதிலாக மூத்தவருக்கு முன்னுரிமை என்ற நீதியை நிலை நாட்டுவதே அவன் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கினை நிறைவேற்ற அவன் ஆயத்தமாகவும் இருந்தான்.


நல்லாட்சியும் சிறப்பும் மிக்கதாக விளங்கும் இலங்கைத்தீவின் யாழ்ப்பாண அரசினை போராடிக் கைப்பற்ற முடியாத எதிரிகள் அதனை சூழச்சிகளின் மூலம் கைப்பற்ற முனைந்தனர். அவர்களின் சதித்திட்டத்தின் மூலவேரைக் களைந்தெறிய முடியாத முதுமை நிலையில் இருந்த மன்னன், நல்லூரின் அரண்மனை பிரதான வாயில்புறம் அமைந்துள்ள மாமுனிவர் இருப்பிடம் நாடிச் சென்றான். முக்காலமும் கூறவல்ல அந்த மாமுனிவர் மன்னனை வரவேற்று இருக்கையில் அமரச் செய்தார். இருக்கையில் அமர்ந்த பரராசசேகர மன்னன் ''முனிவரே! முக்காலமும் உணரவல்ல ஞானியே! நான் முதுமை அடைந்து விட்டேன். இளவரசர்கள் இருவரையும் விதியின் சதியால் இழந்து விட்டேன். ஆதலினால் அடுத்த ஆட்சிக்குரிய மைந்தன் பரநிருபசிங்கனிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்க விரும்புகிறேன். முடிசூடுவதற்கு ஏற்ற நல்ல நாள் பார்த்துக்கூறுங்கள்'' என வேண்டினான்.

மாமுனிவர் மன்னனை நோக்கி, ''மாசில்லாத ஆட்சி செய்யும் யாழ்ப்பாண மன்னா! நான் சகலதும் அறிவேன். உங்கள் கருத்தை நான் சற்றும் விரும்பவில்லை. ஏனென்றால், கேடு யாழ்ப்பாண அரசைச் சூழ்ந்திருக்கிறது. யுத்தமேகம் கருக்கொண்டுள்ளது. நாற்புறமும் கொடிய வஞ்சகர்கள் வலை விரித்துள்ளனர். ஆகையினால், ஆட்சிப்பொறுப்பை வலிமையுள்ள ஒருவனிடம் தான் ஒப்படைக்கவேண்டும். அத்தகைய வலிமை நிறைந்தவன் உன் கடைசி மகன் சங்கிலியே ஆவான். அவனுக்கு அஞ்சாது முடிசூடுவாய். அவன் அழியாத புகழினை இம்மண்ணில் ஏற்படுத்துவான். பரநிருபசிங்கனிடம் ஆட்சி செல்லுமானால் பத்தாம் நாள் பறங்கியர்கள் இம்மண்ணை ஆக்கிரமிப்பார்கள். எனவே, இந்த எழில்மிகு யாழ்ப்பாணப் பெருநாட்டை ஆற்றல் மிக்கோன் ஒருவனே ஆளவேண்டும். ஆசைவெறி கொண்ட அற்பர்களால் அல்ல. பெரியோர்கள் குறை சொல்வார்கள் என்று நீ பேதலிக்க வேண்டாம். பெரியோரெல்லாம் சரியான காரியமே செய்தானென உன்னை வாழ்த்துவார்கள். தயங்கவேண்டாம் உடனே சென்று ஆயத்தங்களைச் சீராகச் செய். என் ஆசி என்றும் உனக்கு உண்டு என்றார்.

மன்னவரும் தளர்ச்சி இன்றி மாமுனிவரை வணங்கிப் பின்னர் அரண்மனை நோக்கிச் சென்றான். அந்தநேரம் ஆதவனும் மேற்குத் திசையில் பணிந்து சென்றான். அன்றிரவு முழுவதும் மன்னன் உறங்கவில்லை. சங்கிலி வீரன்தான் விவேகம் நிறைந்தவன்தான். ஆற்றல் மிகப் பெற்றவன்தான். இருந்தாலும் இளையவனான அவன் எவ்வாறு எதிரிகளைச் சமாளிப்பான் என்ற சிந்தனை அவனைச் சூழ்ந்தது. எனினும், மாமுனிவரின் ஆசி இருக்கும்போது எதற்கும் அஞ்சவேண்டியதில்லை என மன்னன் பரராசசேகரன் நினைத்தான். (தொடரும்....)

பரநிருபசிங்கனின் சூழ்ச்சி பற்றி அறிந்தபோதும்கூட அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டல் வேண்டும் என்ற முடிவிலேயே மன்னன் இருந்தான். வயோதிபம் அவனை ஓய்வெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. சூழவும் எதிரிகளைக்கொண்ட யாழ்ப்பாண அரசைக் காப்பாற்ற நல்ல தலைமை இருக்கவேண்டும் என்பதை மன்னன் அப்போது சிந்திக்கவில்லை. பதிலாக மூத்தவருக்கு முன்னுரிமை என்ற நீதியை நிலை நாட்டுவதே அவன் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கினை நிறைவேற்ற அவன் ஆயத்தமாகவும் இருந்தான்

# வொல்வோ கடல் பந்தயம்




வொல்வோ கடல் பந்தயம் (Volvo Ocean race) என்பது உலகின் மிக நீண்ட உல்லாசப் படகுப் போட்டியாகும். இது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கிறது. இதன் உரிமையாளரான ஏ.பி.வொல்வோவின் பெயரே இந்தப் பந்தயத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது. இவர் ஒரு வாகன நிர்மாணிப்பாளராவார்.

இப்பந்தயம் முதன்முதலாக 1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் 8 ஆம் திகதியன்று 17 உல்லாசப் பயணப் படகுகள் மற்றும் 167 கப்பலோட்டிகளுடன் ஆரம்பமாகியது. சரித்திரபூர்வமாக இப்போட்டிகளுக்கு நடுநிலை வகிக்கும் வகையில் சுமார் 3000 பார்வையாளர் படகுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



பத்தாவது முறையாக இந்தப் பந்தயம் கடந்த 2008 ஆம் ஆண்டில் ஸ்பெயினின் அல்கான்டேயில் நடைபெற்றது. உலகைச் சுற்றி நடைபெறும் இந்தப் போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியிலும் 11 வீரர்கள் இருப்பார்கள்.

சூழ்நிலை சரியாக இருக்கும்போது இந்த உல்லாசப் படகுகள் மணிக்கு 29 மைல்கள் வேகத்தில் செல்லும். ஆனால், காற்றின் வேகம் குறைந்தால் படகின் வேகம் குறையும். படகு வீரர்கள், கடற்கொள்ளையர்களால் தாக்கப்படும் அபாயமும் உண்டு. மொத்தம் 10 பிரிவுகளில், 37 ஆயிரம் 'நாட்டிக்கல் மைல்' தூரத்துக்கு ஒவ்வொரு அணியும் பயணம் செய்யவேண்டும். (ஒரு 'நாட்டிக்கல் மைல்' என்பது 1852 மீற்றர் தூரமாகும்) பந்தயத்தின் ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் ஏதாவது ஒரு துறைமுகத்தில் அணிகள் தரித்துச் செல்லும்.

துறைமுகப் பகுதியில், ஒருமணி நேரப் போட்டியும் நிகழும். அதில், கடற்கரையை ஒட்டி உல்லாசப் படகுகள் போட்டியிடும். அதனால், அப்போட்டியைக் கடற்கரையில் இருந்து பார்வையாளர்கள் பார்த்து மகிழ முடியும்.

1989-1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற 'ஓயிட்பிரெட் பந்தயம்', உலகளவில் கவனத்தை ஈர்த்தது. காரணம்; அதில் ஓர் அணியில் முழுக்க முழுக்கப் பெண்களே இருந்தனர். 'ஓயிட்பிரெட் பந்தயம்' என்பது தான் பிற்பாடு 'வொல்வோ ஓசன் ரேஸ்' என்று பெயர் மாற்றப்பட்டது. அடுத்த 'வொல்வோ ஓசன் ரேஸ்' 2011 ஆம் ஆண்டில் நடைபெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CPU புரொஸஸருக்கு புதிய 'கூலிங் ஃபேன்' அறிமுகம்







கணினிப் பாவனையாளர்களுக்கு சி.பி.யூ அடிக்கடி அதிகம் வெப்பமாகிவிடுவது பாரிய ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. சி.பி.யூ (CPU ) வில் ஏற்படும் வெப்பத்தைத் தணிப்பதற்காக 'கூலிங் மின்விசிறி' (Cooling Fan) ஒன்று அதனுள் பொருத்தப்பட்டிருப்பதுண்டு. ஆனாலும், இதன் பயன்பாடு முழுமையானதாக இல்லாமையால் 'நொக்ச்சுவா' (Noctua) என்ற நிறுவனம் கூடிய பயன்மிக்க 'கூலிங் ஃபேன்' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

சீ.பி.யூவில் புரொஸஸரின் வெப்பத்தைத் தணிப்பதற்கு பொதுவாக இதுவரை பாவனையிலிருந்த கூலிங் ஃபேனில் கிடைக்கின்ற பயன்பாட்டில் சிற்சில குறைபாடுகள் இருப்பதாக கூறப்பட்டு வந்தது. இந்த விசிறியின் மூலம் வீசப்படுகின்ற காற்றானது புரொஸஸரின் வழியே வெளியேறுகையில் புரொஸஸரின் மேற்புறமாக உள்ள வெப்பம் மட்டம் நீக்கப்படக்கூடியதாக இருந்து வந்துள்ளது. ஆனால், புரொஸஸரின் அருகாமையிலுள்ள வெப்பத்தை நீக்க முடிவதில்லை. இதனால், புரொஸஸரின் வெப்பம் தணிவதற்கு அதிக கால நேரம் எடுத்தது.



இவ்வாறு புரொஸஸர் வெப்பமடையும்போது அதன் தொழிற்பாட்டில் உள்ள வேகமும் குறையத் தொடங்கியது. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டுதான் 'நொக்ச்சுவா' நிறுவனம் இந்த புதிய வலுக் கூடிய 'கூலிங் ஃபேனை' அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய கூலிங் ஃபேனில் இரண்டு பக்கங்களில் காற்று வெளிவரும் தன்மையைக் கொண்டுள்ளமையால் புரொஸஸர் மட்டுமன்றி அதனை அடுத்ததாக உள்ள மதர்போர்ட்டும் (Mother Board) கூட குளிர்ச்சி நிலையை அடைகின்றது.

மேற்படி, 'நொக்ச்சுவா கூலிங் ஃபேனின் விசிறிகள் நிமிடத்திற்கு 1200 தடவைகள் சுற்றக்கூடியது. இதன்மூலம் ஒரு மணித்தியாலத்திற்குள் பெருமளவில் வெப்பத்தை வெளியேற்ற முடிகின்றது.

அதுமட்டுமன்றி, இதுவரை பாவனையிலிருந்த கூலிங் ஃபேன்களில் சத்தம் எழுவது பெரிய பிரச்சினையாக இருந்து வந்தது. ஆனால், நொக்ச்சுவா கூலிங் ஃபேனில் அந்த சிக்கலும் இல்லை. அதன் சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான 'எடப்டர்' (Ultra-low noice adaptor) ஒன்று காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



அதிலும் எந்தவொரு 'சொக்கட்'களுடனோ, மதர்போர்ட்களுடனோ பொருந்தக்கூடிய வகையிலேயே இது அமைக்கப்பட்டிருப்பதனால், புதிய இன்டெல் புரொஸஸர்களான இன்டெல் கோர் ஐ செவன் (Intel core i7) மற்றும் கோர் ஐ ஃபைவ் (Intel core i5) போன்றவற்றிலும் இந்த நொக்ச்சுவா கூலிங் ஃபேனை பொருத்தக்கூடியதாக இருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜுலை மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 28, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org